இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை
(eCRC) ஆய்வின் கண்டறிவுகள்

# பிரதேச சபைகளினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான இறுதி ஆய்வு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட
பிரதேச செயலகப்பிரிவுகளுக்கான பணிமதிப்பீட்டு ஆய்வறிக்கை
ஒக்டோபர் 2018

பாசித் ஜனதீன், இசுரு தென்னகோன், மேகலா மகிழ்ராஜா,
கு. ரொமேஷன் மற்றும் ஹசந்தி தென்னகோன்

cepa
centre for poverty analysis

## இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை (eCRC) ஆய்வின் கண்டறிவுகள்

# பிரதேச சபைகளினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான இறுதி ஆய்வு

## மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேச செயலகப்பிரிவுகளுக்கான பணிமதிப்பீட்டு ஆய்வறிக்கை

ஒக்டோபர் 2018

பாசித் ஜனதீன், இசுரு தென்னகோன், மேகலா மகிழ்ராஜா,
கு.ரொமேஷன் மற்றும் ஹசந்தி தென்னகோன்

©வறுமை ஆராய்ச்சி நிலையம்

முதற்பதிப்பு – 2018

ISBN 978-955-3628-46-6

பிரதேச சபைகளினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான இறுதி ஆய்வு : இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை (eCRC) ஆய்வின் கண்டறிவுகள் : மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளுக்கான பணிமதிப்பீட்டு ஆய்வறிக்கை / பாசித் ஜனதீன், இசுரு தென்னகோன, மேகலா மகிழ்ராஜா, கே. ரொமேஷன் மற்றும் ஹசந்தி தென்னகோன. - கொழும்பு : வறுமை ஆராய்ச்சி நிலையம், 2018 –

ப. 40 ; செமீ. 29.

ISBN 978-955-3628-464-6

i. 352.1607205493டிவி 23 ii. தலைப்பு

1. பிரதேச சபைகளினால் வழங்கப்படும் சேவைகள

தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட வெளியீட்டு பட்டியல் தரவு

இப்பதிப்பிற்கான முழு பதிப்புரிமையானது வறுமை ஆராய்ச்சி நிலையத்துக்கே உரிமையானதாகும். இந்நூலின் எந்தவொரு பகுதியும் நூலாசிரியர்/கள் மற்றும் பதிப்பாசிரியர்களின் ஒப்புதலுக்கேற்ப மீள பதிப்பு செய்யப்படலாம்.

ஆய்வுகள், திருத்தப்பட்ட தொகுதிகள், பணி அறிக்கைகள் (working paper), சுருக்கமான ஆவணங்கள் போன்றன தற்போது CEPA வெளியீடுகளில் உள்ளடக்கப்படுகின்றன. இந்த ஆய்வில் வெளியிடப்பட்ட கண்டறிவுகள் மற்றும் பரிந்துரைகள் போன்றன அந்தந்த பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள பொதுச்சேவைப் வழங்குநர்கள் மற்றும் பொதுச்சேவை பெறுநர்களால் வழங்கப்பட்டவைகளாகும். CEPAஅல்லது நன்கொடையாளர்களின் கருத்துகள் அல்லது கொள்கைகளை இந்த ஆய்வானது பிரதிபலிக்கவில்லை.

இந்த பதிப்பு தொடர்பான அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்ள தொடர்புகொள்வதற்கு:

வறுமை ஆராய்ச்சி நிலையம்
29 ஆர். ஜீ. சேனநாயக்க மாவத்தை, கொழும்பு 07, இலங்கை
தொலைபேசி: +94(011) 2676955இ 4690200
தொலைநகல்:+94(011) 2676959
மின்னஞ்சல;: info@cepa.lk
www.cepa.lk

இந்த ஆவணம் ஐரேப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தின் உள்ளடக்கங்கள் CEPA இன் முழுப் பொறுப்பாகும் என்பதோடு எந்தவொரு சூழ்நிலையிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாட்டினை பிரதிபலிப்பதாக கருதமுடியாது.

# நூலாசிரியர்கள்

## பாசித் ஜனதீன்

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வு உத்தியோகத்தர் ஆவார். இவர் கொழும்புப் பல்கலைகழகத்தில் சமூக விஞ்ஞானப் பிரிவில் தனது கலைமாணி பட்டத்தினைப் பெற்றார். பல்வேறு பங்குதாரர் செயன்முறை மற்றும் சமூகக் கற்கைகள் தொடர்பாக நெதர்லாந்து, வாஹனிங்ஹன்பல்கலைக்கழகத்திலிருந்தும்,சமூகப்பொறுப்புடைமைக் கருவிகள் குறிப்பாக, குடிமக்கள் அறிக்கை அட்டை முறைமை தொடர்பாக இந்தியாவில் பெங்களூரிலுள்ள பொதுவிவகாரங்கள் மையத்திடமிருந்தும் சர்வதேச உரிமங்களைப் பெற்றுள்ளார். வறுமை ஆராய்ச்சி நிலையத்தில்,திறனைக் கட்டியெழுப்புபவராகவும், வசதிப்படுத்துனராகவும் (Facilitator) பயிற்சியாளராகவும் செயற்படுகின்றார் அதேபோல ஆராய்ச்சி போன்றவற்றில் ஈடுபடுவதோடு ஆய்வு நடவடிக்கை மற்றும் செயன்முறையில் தனது நிபுணத்துவத்தினை கையாளுகின்றார். சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து பணிபுரிவதில் முக்கியபங்கு வகிக்கின்றார் அத்தோடு சமூகப் பொறுப்புக்கூறும் பொறி முறைகள் தொடர்பான திறனைக் கட்டியெழுப்புவதற்கு வழிகாட்டல்களை வழங்குவதோடு வறுமையின் முகங்கள் எனும் கருப்பொருளினை ஆய்வு செய்கின்ற குழுவிலும் பணியாற்றி வருகின்றார். வவுனியா மற்றும் முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களின் இரண்டாம் நிலைக் கல்வி தொடர்பாக வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் 2014 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வுச் செயன்முறைக்கும்,வெளியீட்டிற்கும் வழிவகுத்தார். இவர் தற்போது வறுமை ஆராய்ச்சி நிலையத்தில் சிறந்த நல்லாட்சி மற்றும் சமூகப் பொறுப்புக்கூறும்கருவியாகிய குடிமக்கள் அறிக்கை அட்டையினை வழிநடாத்தி வருகின்றார்.

## இசுரு தென்னகோன்

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் கனிஷ்ட ஆய்வு உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார். இவர் தற்போது கொழும்பு பல்கலைகழகத்தில் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமா கற்கைநெறி ஒன்றினை பயின்று வருவதோடு பொருளாதாரத்தில் குறிப்பாக பொருளாதாரக் கொள்கை மற்றும் முகாமைத்துவம் எனும் பாடநெறியில் இளமானி பட்டத்தினையும் கொழும்பு பல்கலைகழகத்தில் இருந்து பெற்றுள்ளார். ஆலோசனை உளவியல் தொடர்பில் டிப்ளோமாவை பெற்றுள்ளதோடு ஒரு ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். இசுருஒரு கவிஞர் என்பதோடு அவர் இதுவரை மூன்று கவிதை புத்தகங்களை வெளியிட்டுள்ளார். இவர் முன்பு இலாப நோக்கமற்ற நிறுவனங்களில் திட்ட ஒருங்கிணைப்பாளராகவும், ஆய்வு உதவியாளராகவும் பணியாற்றியுள்ளார். வறுமை ஆராய்ச்சி நிலையத்தில், இவர் வறுமையின் முகங்கள் எனும் கருப்பொருளினை ஆய்வு செய்கின்ற குழுவிலும், தகவல் தொடர்பாடல் குழுவிலும் பணியாற்றி வருகின்றார். இவர் தற்போது குடிமக்கள் அறிக்கை அட்டை தொடர்பில் கவனம் செலுத்துகின்ற ஒரு ஆய்வில் ஈடுபட்டுள்ளதோடு மொனராகலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாய்விற்கு இவரே கள ஒருங்கிணைப்பாளராகவும் செயற்பட்டு வருகிறார்.

### மேகலா மகிழ்ராஜா

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வு உத்தியோகத்தராவார். இவர் பேராதனை பல்கலைகழகத்தில் அபிவிருத்தி நடைமுறைகள் தொடர்பாக முதுகலைமாணி பட்டத்தினைப் பெற்றுள்ளார். அத்தோடு இலங்கை மதிப்பீட்டு (Sri Lanka Evaluation Association -SLEvA)சங்கத்துடன்இணைந்த தேசிய தொழில்துறை நிறுவனத்தில் (National Institute of Labour Studies -NILS)கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு எனும் டிப்ளோமா பாடநெறியையும் நிறைவு செய்துள்ளார். இவர், வறுமை ஆராய்ச்சி நிலையத்தில், திறன் அபிவிருத்தி மற்றும் பயிற்சியளித்தல் அதேபோல ஆராய்ச்சி போன்ற விடயங்களில் ஈடுபட்டுள்ளதோடு ஆய்வு நடவடிக்கைகளில் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார். தற்போது இவர் சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து பணி புரிவதில் முக்கிய பங்கு வகிக்கின்றார் அத்தோடு சமூகப் பொறுப்பு பொறிமுறைகள் குறிப்பாக “குடிமக்கள் அறிக்கை அட்டை” எனும் கருவி தொடர்பான திறனை கட்டியெழுப்புவதற்கான ஆதரவினை வழங்குகின்றார். இவர் குடிமக்கள் அறிக்கை அட்டை தொடர்பான ஆய்வில் தனது பங்களிப்பினை வழங்கியதோடு 2014 இல் வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்ட வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் இரண்டாம் நிலைக் கல்வி தொடர்பான வெளியீட்டிலும் தனது பங்களிப்பினை வழங்கியிருந்தார்.

### குலசபாநாதன் ரொமேஷன்

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தராகவும் முகாமைத்துவ குழுவின் ஒரு உறுப்பினராகவும் பணியாற்றி வருகின்றார். இவர் அபிவிருத்தி துறையில் அரசு மற்றும் நிதி நிறுவனங்களுடன் கடந்த 20 வருடங்களாக பணியாற்றியுள்ளார். இவர் கொழும்பு பல்கலைகழகத்தில் நிதியியல் பொருளாதாரத்தில் தனது முதுகலைமாணி பட்டத்தினைப் பெற்றுள்ளார். வறுமையின் முகங்கள் தொடர்பாக ஆய்வு செய்கின்ற அணியின் தலைவர் என்ற வகையில்,இவரும் அவரது அணியும்வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வு மற்றும் ஆலோசனை நடவடிக்கைகளில் பெறப்படுகின்ற வறுமை, சமத்துவமின்மை மற்றும் சுபீட்சம் தொடர்பான விடயங்களை சேகரிப்பதற்கு பொறுப்பானவர்களாவர். மேலும்,வறுமையின் முகங்கள் தொடர்பான குழுவானது வறுமை அளவீடு குறித்து பணியாற்றுவதோடு வறுமை மீது தாக்கம் செலுத்துகின்ற பேரினக் காரணிகள் தொடர்பாக கவனம் செலுத்த முன்வந்துள்ளது.

### ஹசந்தி தென்னகோன்

தஸ்மானியா பல்கலைகழகத்தில் சுற்றுச்சூழல் முகாமைத்துவம் எனும் பாடநெறியில் முதுமாணி பட்டத்தினை பெற்றுள்ளதோடு, பெருநிறுவனங்களின் பேண்தகைமை தொடர்பாக விரிவான அனுபவத்தினை கொண்டுள்ளார். சுற்றுச்சூழல் மற்றும் சமூக பேண்தகைமை தொடர்பான விடயங்களில்இவர் கவனம் செலுத்துகின்றார். இவர் தற்போது வறுமை ஆராய்ச்சி நிலையத்திற்கான ஆய்வு ஆலோசகராக கடமையாற்றுவதோடு உலக வங்கியில் சமூக பாதுகாப்பு ஆலோசகராகவும் கடமையாற்றுகிறார்.

## வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA) பற்றி

வறுமை ஆராய்ச்சி நிலையமானது (Center for Poverty Analysis-CEPA),வறுமை தொடர்பான அபிவிருத்தி விடயங்களில் ஒரு சிறந்த புரிந்துணர்வினை வழங்குகின்ற இலங்கையின் சுயாதீனமான ஆய்வு அமைப்பாகும். "வறுமை என்பதொரு அநீதியாகும் அது இல்லாதொழிக்கப்பட வேண்டியதே" என வறுமை ஆராய்ச்சி நிலையம் நம்புவதோடு அதனை மையப்படுத்தி தனது ஆய்வுகளை முற்படுத்தி வலியுறுத்துகின்றது. அத்தோடு அத்தோடு வறுமையை வெற்றிகொள்வதென்பது தேசிய மற்றும் சர்வதேச ரீதியான கொள்கைகள், நடைமுறைகள் போன்றவற்றில் மாற்றங்களை/ சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதையும் அதேபோல வறுமையிலுள்ள மக்களுடன் இணைந்து செயற்படுவதையும் உள்ளடக்குகிறது. வறுமை ஆராய்ச்சி நிலையமானது சுயாதீனமான பகுப்பாய்வு, அபிவிருத்தி வகிபங்காளர்களின் திறனைக் கட்டியெழுப்புதல், மற்றும் கொள்கை அழுத்தங்களுக்கான வாய்ப்புகளைக் கண்டறிதல் தொடர்பான அம்சங்களை முக்கியத்துவப்படுத்தி வலியுறுத்துகின்றது. சந்தையின் தேவைகளுக்கேற்ப பிரதிபலிக்கின்ற அதேவேளை, பலமான அனுபவரீதியான ஆதாரங்களை அடிப்படையாகக்கொண்ட சேவை வழங்குதல் தொடர்பான எமது வலுவான நோக்குநிலையானது எம்மீது செல்வாக்கு செலுத்துகின்றது. வாடிக்கையாளர் கோரிக்கைகளின் மூலம் இந்தசந்தை நோக்குநிலையை வறுமை ஆராய்ச்சி நிலையம் பராமரிக்கின்றது. இறுதியாக தேசியரீதியாக, பிராந்தியரீதியாக, துறைரீதியாக, நிகழ்ச்சித்திட்டம் மற்றும் திட்டஅளவில் வறுமையோடு தொடர்புடைய அபிவிருத்திக் கொள்கையில் செல்வாக்கு செலுத்துவதில் பங்களிப்புச் செய்வதற்கு வறுமை ஆராய்ச்சிநிலையம் முயற்சிக்கின்றது. மற்றும் வறுமை ஆராய்ச்சி நிலையமானது உட்கட்டமைப்பு, குடிப்பெயர்வு, சுற்றுச்சூழல், முரண்பாடு மற்றும் நலினத்துவம் போன்ற ஐந்து பரந்த கருப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு இணையான சுயாதீன ஆராய்ச்சியினையும் தொடர்கின்றது.

# நன்றியுரை

இந்த ஆய்விற்கு ஆதரவளித்த ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வறுமை ஆராய்ச்சி நிலையமானது (Centre for Poverty Analysis-CEPA) நன்றி தெரிவிக்க விரும்புகின்றது. வறுமை ஆராய்ச்சி நிலையமானது ACTED உடன் இணைந்து மேற்கொண்ட "சமூக அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி கூட்டுறவினை உருவாக்குதல்: சிறந்த சமூக நல சேவைகளுக்காக சிவில் சமூக அமைப்புகள் (Civil Society Organizations–CSOs)மற்றும் அரச அதிகாரிகளுக்கிடையிலான ஒத்துழைப்பினை வளர்த்தல்" எனும் திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வினை (Citizen Report Card-CRC) வடிவமைப்பதிலும், முன்னெடுப்பதிலும் CEPA முன்னணி வகித்தது.

மட்டக்களப்பு, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள், மேலதிக செயலாளர்கள்,ACLGs, பிரதேச சபைகளின் செயலாளர்கள் (Secretaries of Pradheshiya Sabhas-PSs)மற்றும் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களின் வலையக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் (Deputy Directors of Education –DDEs), உத்தியோகத்தர்கள் போன்றோரால் எமக்கு வழங்கப்பட்ட ஆதரவின் மூலம் மற்றும் தரவு சேகரிப்பாளர்களுடன் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் கனிஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் சிவலிங்கம் அனுஷா மற்றும் ஷெஹானா மிர்சா ஆகியோர் வழங்கிய பங்களிப்பினால் இந்த ஆய்வு சாத்தியமானது. இந்த ஆய்விற்கு தேவையான தகவல்களை வழங்கிய பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் மதிப்புமிக்க பங்களிப்பிற்கு CEPA நன்றி தெரிவிக்க விரும்புகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தலுள்ள பின்வரும் சிவில் சமூக அமைப்புகளுக்கும் CEPA நன்றி தெரிவிக்க விரும்புகின்றது.

| தொ.இல | பிரதேச செயலகப் பிரிவு | கிராமசேவகர் பிரிவு | சிவில் சமூக அமைப்புகளின் பெயர் |
|---|---|---|---|
| 1 | மண்முனை தென்மேற்கு | கடுக்காமுனை | ஆதவன் சமூக மையம் |
| 2 | மண்முனை தென்மேற்கு | அரசடித்தீவு வடக்கு | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 3 | மண்முனை தென்மேற்கு | முனைக்காடு மேற்கு | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 4 | மண்முனை தென்மேற்கு | முனைக்காடு வடக்கு | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 5 | மண்முனை தென்மேற்கு | கொக்கட்டிச்சோலை | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 6 | மண்முனை தென்மேற்கு | மகிழடித்தீவு தெற்கு | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 7 | கோரளைப்பற்று தெற்கு | கோரக்கள்ளி மடு | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |

| | | | |
|---|---|---|---|
| 8 | கோரளைப்பற்று தெற்கு | கிராண் கிழக்கு | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 9 | கோரளைப்பற்று தெற்கு | தேவபுரம் | நட்சத்திரா மாதர் சங்கம் |
| 10 | கோரளைப்பற்று தெற்கு | திகிலிவேட்டை | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 11 | கோரளைப்பற்று தெற்கு | வாகனேரி | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 12 | போறத்தீவுப்பற்று | செல்வபுரம் | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 13 | போறத்தீவுப்பற்று | வன்னிநகர் | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 14 | போறத்தீவுப்பற்று | மாவேற்குடா | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 15 | போறத்தீவுப்பற்று | கோவில் போறத்தீவு மேற்கு | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 16 | போறத்தீவுப்பற்று | கணேசபுரம் | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 17 | போறத்தீவுப்பற்று | சின்னவதை | வள்ளுவர் சமூக மையம் |
| 18 | ஏறாவூர் நகரம் | ஐயங்கேணி முஸ்லிம் | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 19 | ஏறாவூர் நகரம் | மீராக்கேணி | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 20 | ஏறாவூர் நகரம் | மிச்நகர் | கிராம அபிவிருத்தி சங்கம் |

# சுருக்கக் குறியீடுகளின் பட்டியல்

| | |
|---|---|
| ACLG | Assistant Commissioner of Local Government- உள்ளூராட்சி உதவி ஆணையாளர் |
| EU | European Union - ஐரோப்பிய ஒன்றியம் |
| CEPA | Centre for Poverty Analysis- வறுமை ஆராய்ச்சி நிலையம் |
| CSO | Civil Society Organisation – சிவில் சமூக அமைப்பு |
| CRC | Citizen Report Card – குடிமக்கள் அறிக்கை அட்டை |
| eCRC | Electronic Citizen Report Card- இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை |
| DS | Divisional Secretary – பிரதேச செயலகம் |
| DDE | Deputy Director of Education – பிரதி கல்விப் பணிப்பாளர் |
| GNDs | GramaNiladhari Divisions – கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் |
| PS | Pradeshiya Sabha– பிரதேச சபை |
| WRDS | Women's Rural Development Society– மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| RDS | Rural Development Society – கிராம அபிவிருத்தி சங்கம் |
| ZED | Zonal Director of Education – வலயக் கல்விப் பணிப்பாளர் |

# விளக்கப்படங்களின் பட்டியல்


வீளக்குப்புடும் 1: நீரீன் குீஜடுக்குும் துன்ஜமு முற்றுும் புயுன்புர்டு ........ 10
வீளக்குப்புடும் 2: வீதீகுளீன் குீஜடுக்குும் துன்ஜமு முற்றுும் புயுன்புர்டு ........ 11
வீளக்குப்புடும் 3: வீதீ வீளக்குகுளீன் குீஜடுக்குீன்று துன்ஜமு ........ 11
வீளக்குப்புடும் 4: குழீவுகுற்றுல் சேுஜவுகுளீன் குீஜடுக்குும் துன்ஜமு முற்றுும் புயுன்புர்டு ........ 12
வீளக்குப்புடும் 5: நூலுகும்/வுர்சீப்பு ஆஜறு வுசுதீகுளீன் குீஜடுக்குும் துன்ஜமு முற்றுும் புயுன்புர்டு........ 13
வீளக்குப்புடும் 6: வுடீகுர்லு் வுசுதீகுளீன் குீஜடுக்குும் துன்ஜமு முற்றுும் புயுன்புர்டு........ 13
வீளக்குப்புடும் 7: வீஜளுயுர்ட்டு ஜமுதுர்னுங்குளீன் குீஜடுக்குும் துன்ஜமு முற்றுும் புயுன்புர்டு ........ 14
வீளக்குப்புடும் 8: நீரு் வுழுங்குல் தோுர்டுருபுர்னு தீருப்புதீ ........ 15
வீளக்குப்புடும் 9: வீதீகுளு் தோுர்டுருபுர்னு தீருப்புதீ ........ 15
வீளக்குப்புடும் 10: வீதீ வீளக்குகுளு் தோுர்டுருபுர்னு தீருப்புதீ ........ 16
வீளக்குப்புடும் 11: நூலுகு வுசுதீகுளு் தோுர்டுருபுர்னு தீருப்புதீ ........ 17
வீளக்குப்புடும் 12: வுடீகுர்லு் வுசுதீகுளு் தோுர்டுருபுர்னு தீருப்புதீ........ 17
வீளக்குப்புடும் 13: வீஜளுயுர்ட்டு ஜமுதுர்னு வுசுதீகுளு் தோுர்டுருபுர்னு தீருப்புதீ ........ 18
வீளக்குப்புடும் 14: குழீவு சேுகுரீக்குும் சேுஜவுகுளுடனுர்னு தீருப்புதீ........ 18
வீளக்குப்புடும் 15: சேுஜவுகுஜளுப் பேுற்றுக்கோுர்ளுளும் போுர்து ஏற்புடும் முஜறுமுகு சேுலுவுகுளு்/குட்டுணுங்குளு் ........ 19
வீளக்குப்புடும் 16: முஜறுப்புர்டுகுளு்/முனுக்குஜறுகுளுக்குர்னு புதீலுளீப்புகுளு் ........ 20
வீளக்குப்புடும் 17: முஜறுப்புர்டுகுளு்/முனுக்குஜறுகுளுக்கு வுழுங்குப்புட்டு புதீலுளீப்புகுளுடனுர்னு தீருப்புதீ ........ 21
வீளக்குப்புடும் 18: சேுஜவுகுளு் தோுர்டுருபுர்னு ஒட்டுமோுர்த்து முதீப்புீடு........ 23
வீளக்குப்புடும் 19: பீருதேுசு சேுயுலுகுப் பீரீவீன் ஆடீப்புஜடுயீல் ஊடுனுடீ குவுனும் சேுலுத்துப்புடு வேுணு்டீயு முன்னுரீஜமுப்புடுத்துப்புட்டு சேுஜவுகுளு் ........ 24
வீளக்குப்புடும் 20: ஏறுர்வூருப்புற்று DS பீரீவீல் மேும்புடுத்துப்புடு வேுணு்டீயு முன்னுரீஜமுப்புடுத்துப்புட்டு சேுஜவுகுளு் ........ 25
வீளக்குப்புடும் 21: கோுருஜளுப்புற்று தேுற்கு DS பீரீவீல் மேும்புடுத்துப்புடு வேுணு்டீயு முன்னுரீஜமுப்புடுத்துப்புட்டு சேுஜவுகுளு் 25
வீளக்குப்புடும் 22: முணு்முஜனு தேுன்மேுற்கு DS பீரீவீல் மேும்புடுத்துப்புடு வேுணு்டீயு முன்னுரீஜமுப்புடுத்துப்புட்டு சேுஜவுகுளு்26
வீளக்குப்புடும் 23: போுர்றுத்தீவுப்புற்று DS பீரீவீல் மேும்புடுத்துப்புடு வேுணு்டீயு முன்னுரீஜமுப்புடுத்துப்புட்டு சேுஜவுகுளு்........ 26

# உள்ளடக்கம்


1. அறிமுகம் ..... 1

1.1 திட்டம் ..... 1

1.2 அறிக்கையின் செயற்பரப்பெல்லை ..... 2

1.3 ஆய்வின் நோக்கங்கள் ..... 2

1.4 மாதிரி வடிவமைப்பு ..... 2

1.5 ஆய்வு முறைமை ..... 4

1.5.1. குடிமக்கள் அறிக்கை அட்டை என்றால் என்ன? ..... 4

1.5.2. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை (eCRC) என்றால் என்ன? ..... 5

1.5.3. டிமக்கள் அறிக்கை அட்டையின் வடிவமைப்பு ..... 6

1.5.4. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் ஊடாக ஆய்வு செய்யப்பட வேண்டிய சேவைகளை அடையாளம் காணுதல் ..... 7

1.5.5. செயற்திறன் குறிகாட்டிகளின் உருவாக்கம் ..... 7

1.6 ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பிரதேசம் ..... 8

2. முக்கிய கண்டறிவுகள் ..... 10

2.1. சேவைகளின் கிடைக்கும் தன்மை, அணுகல் மற்றும் பயன்பாடு ..... 10

2.2. பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகள் மீதுள்ள ஒட்டுமொத்த திருப்தி ..... 14

2.3. மேலதிக செலவுகள் மற்றும் முறைப்பாடுகள் ..... 19

2.3.1. சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான செலவுகள் ..... 19

2.3.2. முறைப்பாடுகளம்/னக்குறைகளுக்கான பதிலளிப்பு ..... 20

3. பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்கான ஒட்டுமொத்த மதிப்பீடு ..... 22

4. பரிந்துரைகள் ..... 24

4.1. சேவை அடிப்படையில் முன்னேற்றத்தினை வேண்டி நிற்கின்ற பகுதிகள் ..... 24

4.1.1. உடனடி சேவை மேம்பாட்டினை வேண்டி நிற்கின்ற பகுதிகள் ..... 24

4.1.2. ஏனைய பரிசீலனைகள் ..... 27

4.2. முன்னோக்கிய நகர்வு ..... 27

# 1. அறிமுகம்

## 1.1 திட்டம்

சேவை வழங்குநர்களின் பொறுப்புணர்வினை உறுதிசெய்கின்ற அதேவேளை சிறந்த அணுகல் மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்காக அரசாங்க அதிகாரிகளுடன் (சேவை வழங்குநர்களுடன்) ஒத்துழைக்க சிவில் சமூக அமைப்புகளை பலப்படுத்த வேண்டும் என்பதே‘‘*சமூக அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி இணை உருவாக்கம்: சிறந்த சமூக நல சேவைகளுக்காக சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரச அதிகாரிளுக்கிடையில் உள்ள ஒருங்கிணைப்பின் வளர்ச்சிக்கு துணைசெய்தல்*’’எனும் ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவி திட்டத்தின் நோக்கமாகும். பின்வரும் திட்ட முடிவுகளை அடைவதற்கு ACTED மற்றும் வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA) ஒத்துழைப்பு வழங்குகின்றன.

2018ஆம் ஆண்டு ஜனவரி – பெப்ரவரி மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலாம் கட்ட ஆய்வானது, முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் மொனராகலை மாவட்டங்களில் உள்ள பிரதேச சபையின் சேவை வழங்கல் தொடர்பான அடிப்படை தரவுகளை வழங்கியபோதிலும், இத்தரநிலை மதிப்பீட்டு ஆய்வானது (இரண்டாம் கட்ட ஆய்வு) முதலாம் கட்ட ஆய்வில் ஆராயப்பட்ட பிரதேச சபையினால் வழங்கப்படும் சேவைகளின் முன்னேற்றத்தை மேற்பார்வையிட 2018ஆம் ஆண்டு செப்டம்பர்/ஒக்டோபர் மாதம் மேற்கொள்ளப்பட்டது.

ACTED பின்வரும் முடிவுகளை வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளது (RI & R2):

- R1 – தமது பணிப்பாணைகள் மற்றும் உள்ளூர்சமூக அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான திறன் போன்றவற்றினை செயற்படுத்துவதற்கான சிவில் சமூக அமைப்புகளின் ஆற்றலை மேம்படுத்துதல்.

- R2 –சமூக சேவைகள் என்ற அடிப்படையில் உள்ளூர் தேவைகள் மற்றும் இடைவெளிகள் போன்றன பல ‘‘பங்குதாரர்கள் பங்களிப்பு அணுகுமுறை’’ மூலமாகவும்,சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரச அதிகாரிகள் மூலமாகவும் அடையாளம் காணுதல்.

CEPA பின்வரும் முடிவினை வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளது(R3):

- R3 – சேவை வழங்குநரின் சிறந்த பொறுப்புடைமையினை மேம்படுத்துவதற்காக சமூக சேவை வழங்கல்/தரம் குறித்த மேம்பட்ட கண்காணித்தல் மற்றும் பிரதானமாக சிறந்த நடைமுறைகளை பரவலாக்குதல்.

இதில் CEPA ஆல் ஏராளமான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டன அவையாவன:

- பல்வேறு மட்டங்களில் பொதுச்சேவை வஙழ்குநர்களை அடையாளப்படுத்தல்
- இலக்கிடப்பட்ட சிவில் சமூக அமைப்புகளிலிருந்து தரவு சேகரிப்பவர்களை தேர்தெடுத்தல்,
- குடிமக்கள் அறிக்கை அட்டை செயன்முறை தொடர்பாக தரவு சேகரப்பாளர்களை பயிற்றுவித்தல்,
- வினாகொத்தினை வடிவமைத்தல் மற்றும் தரவு சேகரித்தல் போன்றவற்றை வசதிப்படுத்தல்,

- அரசாங்க அதிகாரிகளுடன் (சேவை வழங்குநர்களுடன்) கண்டறிவுகளை பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் இடைவெளிகளை நிரப்புவதற்கான செயற்பாடுகளை விருத்தி செய்வதில் அவர்களுக்கு ஆதரவளித்தல்.

## 1.2 அறிக்கையின் செயற்பரப்பெல்லை

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பிரதேச சபைகளினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக eCRCஇன் இரண்டாம் கட்ட ஆய்வுக் கண்டறிவுகளை (தரநிலை மதிப்பீட்டு ஆய்வு) இவ்வறிக்கையானது உள்ளடக்குகின்றது. ஏறாவூர்பற்று, போறத்தீவுப்பற்று, மண்முனை தென்மேற்கு மற்றும் கோரளைப்பற்று தெற்கு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் 2018 ஆம் ஆண்டு ஜனவரி-பெப்ரவரி மாதம் நடாத்தப்பட்ட 1 ஆம் கட்ட ஆய்வினைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் - ஒக்டோபர் மாதங்களில் 2 ஆம் கட்ட ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது.

## 1.3 ஆய்வின் நோக்கங்கள்

ஆய்வின் குறிப்பிட்ட நோக்கங்களாவன:

(i) பொதுச்சேவைகளின் உண்மையான பயனர்களின் அணுகல், மற்றும் திருப்தி போன்றவற்றினை மதிப்பிடுகின்ற கருவியாகவும் அதேபோல அரசாங்க அதிகாரிகளின் (சேவை வழங்குநர்களின்) சமூக பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான கருவியாகவும் குடிமக்கள் அறிக்கை அட்டையைப் பயன்படுத்துதல்.

(ii) இந்த ஆய்வின் கண்டறிவுகளை செயற்பாடுகளுக்கு சார்பாக பரப்புவதோடு அம்முடிவுகளை செயற்பாட்டுக் கொள்கை மற்றும் நடைமுறை சீர்த்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள பயன்படுத்துதல்.

(ii) ஏனைய மாவட்டங்களிலுள்ள ஏனைய பொது நிறுவனங்கள் மேற்கொள்ளும் இதுபோன்ற முயற்சிகளுக்காக, தற்போது சேவைகளை பெறும் பயனர்களிடமிருந்து பெறப்பட்ட இவ்வனுபவங்களை பகிர்ந்து கொள்ளுதல்.

## 1.4 மாதிரி வடிவமைப்பு

ஒரு சேவையைப் பயன்படுத்துகின்ற மக்களின் வீதம், ஒரு சேவையுடன் மக்கள் கொண்ட திருப்தியின் வீதம் போன்ற தகவல்களைப் பிரித்தெடுப்பதினூடாக தரப்பட்ட ஆய்வுப் பிரதேசம் ஒன்றில் சேவை வழங்கலின் செயற்திறனை மதிப்பிடுவதற்கு இரண்டு அணுகுமுறைகள் பயன்படுகின்றன. குழுவிலுள்ள ஒவ்வொரு தனிநபரையும் பரீட்சித்து பார்த்தல் மற்றும் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கண்டறிவுகளை ஒருங்கிணைத்தல் போன்றன ஒரு முறையாகும். இம்முறையானது, முழுமையான கணக்கெடுப்பு அல்லது குடித்தொகை கணக்கெடுப்பு என்றழைக்கப்படுகின்றது. பாரியளவான சனத்தொகையிலிருந்து ஒரு உபதொகுதியினை தெரிவு செய்து அந்த உபதொகுதியிலிருந்து பொருத்தமான தகவல்களைப் பெற்றுக்கொள்வது தகவல்களைப் பிரித்தெடுப்பதற்கான மற்றொரு வழிமுறையாகும். இம்முறையானது "மாதிரி வடிவமைப்பு" எனவும் தெரிவுசெய்யப்பட்ட உபதொகுதி "மாதிரி" எனவும் அழைக்கப்படுகின்றது. மிகவும் செலவு குறைந்ததாக மற்றும் குறைந்த ஊழிய செறிவினைக் கொண்டிருப்பதால் இவ்வாய்வில் "மாதிரி வடிவமைப்பு" ஆய்வுமுறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

நம்பகமான மற்றும் துல்லியமான தரவானது, மாதிரி தேர்ந்தெடுக்கப்படும் முறையிலேயே தங்கியுள்ளது. ஆய்வுப் பகுதியில் காணப்படுகின்ற மொத்த சனத்தொகையின் வேறுபாடுகள் மற்றும் பண்புகள் அனைத்தையும் பிரதிபலிக்கின்ற போது ஒரு மாதிரியானது சிறந்ததாக அமைகின்றது.

இரண்டு வகையான சேவைகளுக்காக இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை முன்னெடுக்கப்பட்டது. ஒன்று இரண்டாம் நிலை இலவசக்கல்வி மற்றொன்று பிரதேச சபைகளினால் வழங்கப்படும் சேவைகள். முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் மொனராகலை மாவட்டங்களில் ACTED மூலம் தெரிவுசெய்யப்பட்ட 60 கிராமசேவகர் பிரிவுகளை இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டைஉள்ளடக்கியுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட 60 கிராமசேவகர் பிரிவுகளில் 1200 குடும்பங்கள் அல்லது ஒவ்வொரு மாவட்டங்களில் உள்ள 20 கிராமசேவகர் பிரிவுகளில் 400 குடும்பங்களாக ஆய்விற்கான மாதிரியளவு தீர்மானிக்கப்பட்டது. 20 கிராமசேவகர் பிரிவுக்கும் 400 குடும்பங்கள் எனும் மாதிரியளவானது பின்னர் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் சேவைகளைப் பெற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்தன.


மட்டக்களப்பு, முல்லைத்தீவு மற்றும் மொனராகலை போன்ற மூன்று மாவட்டங்களிலும் மாதிரி வடிவமைப்பு செயன்முறையானது பல கட்டங்களில் நிறைவு செய்யப்பட்டிருந்தது. முதல் கட்டத்தில்,கிராமசேவகர் பிரிவுக்குள் காணப்படுகின்ற குடும்பங்களின் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு,சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்கள் மூலம், ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளிலும் பாடசாலைக்கு செல்லும் (தரம் 5 – தரம் 13 வரை) வயதுடைய பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு, பட்டியலிடப்பட்டன. இவற்றுள், ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளுக்காக கணக்கிடப்பட்ட மாதிரியளவினை அடிப்படையாகக் கொண்டு, ஆய்விற்கான குடும்பங்களைப் பிரிதிநிதித்துவப்படுத்தும் மாதிரியானது எழுமாறாக தெரிவுசெய்யப்பட்டது. அதேவேளை பிரதேச சபை சேவைகள் தொடர்பான ஆய்விற்கென, மாதிரியானது ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்களால் அடையாளம் காணப்பட்ட பாடசாலைக்கு செல்லும் மாணவர்களை உள்ளடக்கிய குடும்பங்களில் இருந்து பெறப்பட்டதோடு பிரதேச சபையினால் வழங்கப்படும் குறைந்தது ஒரு சேவையையாவது கடந்த ஒருவருட காலத்தில் பயன்படுத்திய அல்லது பயன்படுத்திக்கொண்டிருக்கின்ற குடும்பங்களாக இருக்க வேண்டும் என்ற அளவுகோலின் அடிப்படையில் மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டன. கிராமசேவகர் பிரிவிலுள்ள அனைத்து கிராமங்களையும் பிதிநிதித்துவப்படுத்துகின்ற வகையில் பரந்தளவிலான பகுதிகளை உள்ளடக்கி இன ரீதியிலான விகிதாரம் எனும் கண்ணோட்டத்தினை கவனத்தில் கொண்டு ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிகளில் இருந்தும் மாதிரி வடிவமைப்பானது மேற்கொள்ளப்பட்டிருந்தது அனைத்து தரப்பரிசோதனைகளையும் தொடர்ந்து மூன்று மாவட்டங்களிலுள்ள 60 கிராமசேவகர் பிரிவுகளுக்கும் 1200 குடும்பங்கள் மாத்திரமே (மட்டக்களப்பு மாவட்டத்தில் 400, மொனராகலை மாவட்டத்தில் 400 மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 400) பகுப்பாய்விற்கென தீர்மானிக்கப்பட்ட மாதிரிகளாகும்.

இரண்டாம் கட்ட ஆய்வின் போது, முடியுமானவரை முதலாம் கட்டத்தில் ஆய்வுசெய்யப்பட்ட அதே குடும்பங்கள் ஆய்விற்குட்படுத்தப்பட்டன. இருப்பினும், அதே குடும்பங்களை ஆய்விற்குட்படுத்த வேண்டுமென்ற தேவை இருக்கவில்லை அல்லது தரவு சேகரிப்பாளர்கள் அதே குடும்பங்களுக்குச் செல்ல வேண்டுமென முன்னுரிமைப்படுத்தப்படவில்லை. முதலாம் கட்ட ஆய்வில் பங்கேற்ற குடும்பங்கள் இக்குறிப்பிட்ட ஆய்வின்போது பங்கேற்றனரா இல்லையா என்பது கருத்தில்கொள்ளாமல், ஆய்வுப்பகுதியிலுள்ள அனைத்து குடும்பங்களில் இருந்தும் பெறப்பட்ட கருத்துக்களானவை, முழு சமூகத்தையும் உள்ளடக்கிய வகையில் வழங்கப்படுகின்ற சேவைகளின், முன்னேற்றம் தொடர்பான முடிவுகளை வரையறுப்பதற்கு போதுமானதாக இருக்கின்றன.

பின்வரும் மாதிரி வடிவமைப்புக் கூறினை (sampling matrix) அடிப்படையாகக் கொண்டு மாதிரியாக்கம் முன்னெடுக்கப்பட்டது:

| சனத்தொகை (குடும்பங்கள்) | குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்யப்பட்ட மாதிரியளவு (95 % நம்பிக்கையாயிடை) | குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்யப்பட்ட மாதிரியளவு (90 % நம்பிக்கையாயிடை) |
|---|---|---|
| 100 | 80 | 66 |
| 500 | 217 | 141 |
| 1000 | 278 | 164 |
| 5,000 | 357 | 189 |
| 10,000 | 370 | 192 |
| 30,000 | 379 | 195 |
| 50,000 | 381 | 195 |
| 100,000 | 383 | 196 |
| 200,000 | 383 | 196 |

கீழே தரப்பட்ட செயற்கைகோள் படமானது இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்விற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகளின் பரவலாக்கத்தினை காட்டி நிற்கின்றது.




# 1.5 ஆய்வு முறைமை

## 1.5.1. குடிமக்கள் அறிக்கை அட்டை என்றால் என்ன?

குடிமக்கள் அறிக்கை அட்டையானது (Citizen Report Card-CRC), இலவசமாக வழங்கப்படுகின்ற பொது சேவைகளின் செயற்திறன் குறித்து அச்சேவையினை பெறுபவர்களிடமிருந்து முறையான மற்றும் அனுபவங்கள் தொடர்பான கருத்துக்களை பெறக்கூடிய ஒரு எளிமையான, சக்திவாய்ந்ததொரு கருவியாகும். இவ்வாய்வு முறையானது குறித்த சேவையைப் பெற்றுக்கொள்பவர்களிடம் இருந்து அச்சேவைகளின் தரம், அதனைப் பெற்றுக்கொள்ளும் தன்மை மற்றும் அச்சேவை போதியளவு வழங்கப்படுகின்றதா? மற்றும் அச்சேவை பற்றிய திருப்தி நிலை தொடர்பான கருத்துக்களை சேகரிக்கின்ற ஒரு பங்கேற்பு ஆய்வாகும். சேவை வழங்குநர்களுடன் ஒரு உரையாடலில் ஈடுபடுவதற்கு மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்காக சேவை வழங்குனர்களை பொறுப்புணர்வுடன் இருக்கச்செய்வதற்கு சமூகங்கள்,சிவில் சமூக அமைப்புக்கள் அல்லது உள்ளூராட்சி சபைகள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளுக்கு பலமான மற்றும் செயற்திறன் வாய்ந்த ஒரு அணுகுமுறையினை குடிமக்கள் அறிக்கை அட்டை வழங்குகின்றது. ஆரம்பத்தில் குடிமக்கள் அறிக்கை அட்டைநகர்ப்புற சூழ்நிலைகளில் நடத்தப்பட்டிருந்தாலும், இப்போது பரந்தளவிலான புவியியல் மற்றும் துறைசார்ந்த சூழ்நிலைகளில் பொது சேவை வழங்கலின் நிலையைப் புரிந்துகொள்ள இது உதவுகின்றது.

குடிமக்கள் அறிக்கை அட்டை பல நன்மைகளை வழங்குகின்றது. சேவை வழங்குநர்கள் தாங்கள் வழங்குகின்ற பொதுச் சேவைகளானது பொதுமக்களை குறிப்பாக, போதிய வசதிகளற்ற உறுப்பினர்களை சென்றடைவதற்கான குறைந்த செலவுடைய வழிமுறையை கண்டறிய உதவுகின்றது.

இதனையொட்டி, பொது சேவைப் பெறுநர்கள் தாங்கள் பெற்றுக்கொள்கின்ற சேவைகளின் தரம், செயல்திறன், மற்றும் போதியத்தன்மை குறித்தும் அதேபோல சேவை வழங்குநர்களுடன் அவர்கள் சந்திக்கின்ற பிரச்சினைகள் குறித்தும் தமது கருத்துக்களை உள்ளூர் அரசாங்கத்திற்கு மற்றும் அதிகாரிகளுக்கு தெரிவிக்கும் வாய்ப்பினை வழங்குகின்றது. பல்வேறு சேவை வழங்குநர்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில், பல்வேறுபட்ட சேவைகளுக்கிடையில் தமது மதிப்பீடுகளை ஒப்பிடுவது சாத்தியமாகின்றது. இதன் விளைவாக மதிப்பீடானது (சேவைப்பெறுநரின் திருப்தியினை அடிப்படையாகக் கொண்டது), குறிப்பிட்ட பிரதேசம் ஒன்றிற்கான பொது சேவை வழங்கலின் செயற்திறன் தொடர்பான 'அறிக்கை அட்டையாகமாற்றப்படுகிறது. பொது சேவைப் பெறுநர்களின் அனுபவங்களை குடிமக்கள் அறிக்கை அட்டை பிரதிபலிக்கும் வகையில், மேற்கொள்ளப்படும் சேவை வழங்கல் தொடர்பான ஒரு கருத்துக்கணிப்புடன் குடிமக்கள் அறிக்கை அட்டையை ஒப்பிட்டு பார்க்க முடியாது. உதாரணமாக,குடிமக்கள் அறிக்கை அட்டைகளை உருவாக்கும் ஆய்வுகளானது, குறிப்பிட்ட சேவைகளைப் பயன்படுத்துகின்ற தனிநபர்களை மட்டுமே இலக்காகக் கொண்டிருக்கும்.

உள்ளூர் மற்றும் தேசிய அரசாங்கங்கள், சிவில் சமூக அமைப்புகள் என ஆரம்பித்து 20 இற்கும் மேற்பட்ட நாடுகளிலுள்ள அபிவிருத்தி பங்காளர்கள் வரையான பல்வேறு நிறுவனங்களில் குடிமக்கள் ஈடுபாடு, பங்கேற்பு மற்றும் சேவை மேம்பாடுகளுக்கான ஒரு கருவியாக குடிமக்கள் அறிக்கை அட்டைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இக்கருவி பொதுவாக, குடிமக்கள் மற்றும் அரசாங்கத்துகிடையிலான ஈடுபாட்டின் அடிப்படையில் தரவினை உருவாக்குவதோடு செல்வாக்கு செலுத்தும் பல பகுதிகளில் இதனுடைய பயன்களை விரிவுபடுத்திக்கொள்ள முடியும். உதாரணமாக, பொதுக் கொள்கைகள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பில் அறிவிப்பதற்கான, அரசாங்க செயற்பாடுகள் மற்றும் சேவை வழங்கல் பொறிமுறைகளை மறுசீரமைப்பதற்கான, மற்றும் அரசாங்க மற்றும் சமூக நிறுவனங்களை மீள்கட்டமைப்பதற்கான அடிப்படையாக இது மாற முடியும்.

மட்டக்களப்பு, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் மிகவும் பின்தங்கிய மற்றும் வசதிகள் குறைந்த பிரதேசங்களில் கவனம் செலுத்திய இக்குறிப்பிட்ட ஆய்வில் ஒதுக்கப்பட்ட சமூகங்களுக்கு குரல் கொடுப்பதற்கான ஆற்றல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக காணப்படுகின்றது. தமது சொந்த விருப்பங்களை மேற்கொள்ள, அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள மற்றும் நம்பகமானதும் நிலையானதுமான வாழ்க்கைக்கு வழிவகுப்பதற்கு சமூகங்களுக்கு அதிகாரமளித்தலே நோக்கமாக இருந்தது. இந்த ஆய்வின் நோக்கத்திற்காக, சமூக அடிப்படையிலான ஆய்வின் மூலம் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமை வாய்ந்த சேவைகளை மதிப்பிடுதல் தொடர்பாக வறுமை ஆராய்ச்சி நிலையம் கவனம் செலுத்தியது. வறியோர் சார்பு மற்றும் உரிமைகள் அடிப்படையிலான கண்ணோட்டத்திலிருந்து ஏற்கனவே உள்ள நடைமுறைகள் அதேபோல கொள்கைகளில் அழுத்தங்களை ஏற்படுத்துவதே நோக்கமாக இருந்தது.

சமூக உள்ளீடுகளுக்கு மேலதிகமாக சேவைபெறுநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடையே ஒரு பயனுள்ள உரையாடலை மேம்படுத்துவதற்காக சேவை வழங்குநர்களிடமிருந்து முகாமைத்துவ ரீதியான பிரதிபலிப்பையும் ஆய்வானது பெற்றுக்கொண்டது. இந்த ஆய்வினை மீள மீள முன்னெடுப்பதன் மூலம் ஆய்வின் நன்மை மேம்படுத்தப்படுவதோடு, முகாமைத்துவ ரீதியான பிரதிபலிப்பில் குறிப்பிடப்பட்ட செயற்பாட்டு நடவடிக்கைகள் (அல்லது பிற தலையீடுகள்) சேவை பெறுநர்களுக்கான சேவைகளை மேம்படுத்தியதா என்பதை தீர்மானிக்கவும் வழிவகுக்கும்.

## 1.5.2. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை (நஊசுஊ)என்றால் என்ன?

தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சி, வசதி மற்றும் அதன் சக்திகள் போன்றவற்றினை கையாளக்கூடிய குடிமக்கள் அறிக்கை அட்டைகளை முன்னெடுப்பதற்கான ஒருபுரட்சிகரமான அணுகுமுறையே இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை அல்லது eCRC எனப்படுகிறது. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையானது "ஆண்ராய்ட்" அடிப்படையிலான கையடக்கத் தொலைபேசி (Android –based mobile)பயன்பாடுகளினூடக குடிமக்கள் கருத்துக்களின் நம்பகமான சேகரிப்பினை உறுதிப்படுத்துவதோடு சரியான மற்றும் உரிய நேரத்தில் சேகரிக்கப்பட்ட தகவல்களை பகுப்பாய்வு செய்து அறிக்கையிட முடிகின்றது. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை செயன்முறையில் பல கூறுகள் காணப்படுகின்றன:

### (a) ஆய்வினை மேற்கொள்ளுதல்

பொதுமக்களின் கருத்து மற்றும் அனுபவங்கள் பற்றிய ஒரு அறிவியல் சார் மாதிரி ஆய்வானது, கைப்பேசியொன்றின் பயன்பாட்டினைப் பயன்படுத்தி ஒரு டெப்லெட் (tablet) மூலமாக நடாத்தப்படுகின்றது. தொலைபேசிகள்/டெப்லெட்களில் உள்ள பூகோள நிலைப்படுத்தல் அமைப்பு முறை (GPS) எனும் கண்காணிப்பு முறை மூலம் தரவு சேகரிப்பின் உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை அதிகரிப்பதோடு, உறுதிப்படுத்தப்படுகின்றது.

### (b) தரக்கட்டுப்பாட்டிற்கான தொலைதூரக் கண்காணிப்பு

உண்மை நேர அடிப்படையில் ஆய்வின் முன்னேற்றத்தை கண்காணிக்க,ஆய்வு முகாமையாளர்களுக்கு வலைதளத்தை மையப்படுத்திய ஆய்வு முகாமைத்துவ தொகுதி ஒன்று உதவுகின்றது.இத்தொகுதியானது, தொலைதூரக் கண்காணிப்பு, ஆய்வு நடவடிக்கைகளின் முகாமைத்துவம் போன்றவற்றினை செயற்படுத்துவதால், மிகச்சிறப்பான தரக் கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்துகின்றது.

### (c) தரவுப் பகுப்பாய்வு

இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின்ஒரு பகுதியாக உருவாக்கப்பட்ட ஆன்லைன் டாஷ் போர்ட் (online dash board) மற்றும் தரவுப் பகுப்பாய்வு போன்ற கருவிகளானது, பல்வேறுபட்ட பங்குதாரர் (உதாரணமாக, கொள்கை வகுப்பாளர்கள், நிர்வாகிகள், அரசியல் பிரதிநிதிகள், மற்றும் குடிமக்கள் போன்றோர்) குழுக்களின் தகவல் தேவைகளை அடையாளப்படுத்துகின்றது. விளக்கப்படங்கள் அட்டவணைகள், வரைபடங்கள் ஆகியவற்றின் மூலமாக இலகுவாக புரிந்து கொள்ளும் வகையில் ஆய்வின் முடிவுகள் முன்வைக்கப்படுகின்றன. செயற்திறன் மட்டங்கள் தொடர்பான இலகுவான அனுமானங்களை வழங்குவதற்கு எளிமையான நிறக்குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஆய்வினை அறிக்கைப்படுத்துவதற்காகஇலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டைமொபைல் டெப்லெட்கள் மற்றும் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதால் பல நன்மைகள்ஏற்படுகின்றன:

- இது மிகவும் துல்லியமான தரவினை உருவாக்குகின்றது.
- உடனடி முடிவுகளை வழங்குகின்றது.
- ஆய்வு நடைபெறும் புவியியல் இருப்பிடத்தினை/தரவு சேகரிக்கப்படுகின்ற புவிப்பரப்பை வரைபடத்தில் காட்டுகின்ற முறையை செயற்படுத்துகின்றது.
- இது ஒரு தடவை முதலீட்டு செலவினைக் கொண்டிருப்பதாலும், நேர விரயத்தினை குறைத்துள்ளதாலும் ஆய்வினை மீண்டும் மீண்டும் மேற்கொள்ளும்/செயற்படுத்தும் வகையில் இலகுவாக்கப்பட்டுள்ளது.

## 1.5.3. டிமக்கள் அறிக்கை அட்டையின் வடிவமைப்பு

இந்த ஆய்வின் நோக்கத்திற்காக, மட்டக்களப்பு, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய ஒவ்வொரு மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 20 கிராம சேவகர் பிரிவுகளுக்கென இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வு முறையானது வடிவமைக்கப்பட்டது. ஆய்விற்கென அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களில் இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்கலின் நிலை மற்றும் பிரதேச சபைகளின் சேவை வழங்கல் போன்றவற்றினை உள்ளடக்கும் வகையில் ஆய்வானது வடிவமைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் உள்ள மாவட்ட செயலாளர்கள், வலயக் கல்வி பணிப்பாளர்கள் மற்றும் பிரதேச சபை செயலாளர்களுடனான கலந்துரையாடலில் ஆய்வு நேரம் மற்றும் ஆய்விற்கு தேவையான வசதிகள் குறித்து முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிவில் சமூக அமைப்புகளின் (CSO) குழு ஒன்றினால் ஆய்வானது நடாத்தப்பட்டது. வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சியாளர்கள் அதேபோல ACTED கள உத்தியோகத்தர்களின் நேரடி மேற்பார்வையுடன் மூன்று மாவட்டங்களிலும் இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வுகளை முன்னெடுப்பதற்காக வறுமை ஆராய்ச்சி நிலையத்தின்

மூலமாக சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றுக்கு மாவட்ட ரீதியாக பயிற்சியளிக்கப்பட்டது.

### 1.5.4. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் ஊடாக ஆய்வு செய்யப்பட வேண்டிய சேவைகளை அடையாளம் காணுதல்

சமூகம் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்களுடனான இலக்குக் குழு கலந்துரையாடல்களின் (Focus Group Disscussion-FGDs) போது, (i) பிரதேச சபைகளின் சேவை வழங்கல், (ii) இரண்டாம் நிலைக் கல்விச்சேவை (தரம் 5 – தரம் 13) வழங்கல் ஆகிய இரண்டு சேவைகளும் மேம்படுத்தப்பட வேண்டிய சேவைகளாக முன்னுரிமைப்படுத்தப்பட்டது. இந்த முன்னுரிமைகளானது,ACTED கிராம அபிவிருத்தி திட்டங்களில் (Village Development Plans-VDPs) சுட்டிக்காட்டப்பட்ட முன்னுரிமைகளுடன் ஒத்திருந்தது.

முக்கியமான சேவைகளை மேம்படுத்துவதில் சமூகம் முனைப்புடன் இருக்கின்றது அத்தோடு புதிய பிரதேச சபை தேர்தலில் பிரதேச சபைகளுடன் இணைந்து செயற்படுவதில் ஆர்வமாக இருப்பதால் குடிமக்கள் தமது அரசியல் பிரதிநிதிகளுடன் தொடர்புகொள்வதற்கும்,அவர்களோடு தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்குமான வாய்ப்பினை இது வழங்குகின்றது. பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற பல்வேறுபட்ட சேவைகளில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பின்வரும் ஏழு முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகளானது இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வில் உள்ளடக்கப்பட்டன.

- குடிநீர் சேவைகள்
- வடிகால்
- கழிவகற்றல்
- வீதிகள் மற்றும் ஒழுங்கைகள்
- வீதி விளக்கு
- விளையாட்டு மைதானங்கள்
- நூலகம்

இவற்றில், சமூகம் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூலமாக வழங்கப்பட்ட தரப்படுத்தல்களின் மூலம் மேம்பாட்டிற்கான முன்னுரிமைப் பகுதிகள் அடையாளங்காணப்பட்டன.

கல்விச் சேவைகளைப் பொறுத்தவரை, சமூகத்துடன் மேற்கொள்ளப்பட்ட இலக்குக் குழு கலந்துரையாடல்கள் மூலமாக இரண்டாம் நிலைக் கல்வி முன்னுரிமையுடையதாக அடையாளம் காணப்பட்டது.

### 1.5.5. செயற்திறன் குறிகாட்டிகளின் உருவாக்கம்

மூன்று மாவட்டங்களிலும் உள்ள சமூக குழுக்கள், வலயக் கல்வி அலுவலகங்களில் உள்ள அலுவலர்கள்,பிரதேச சபைகளின் செயலாளர்கள் மற்றும் ACLGs, அரசாங்க அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மூலமாக பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்கான குறிப்பிட்ட செயற்திறன் குறிகாட்டிகளின் தொகுப்பொன்று அடையாளம் காணப்பட்டது.

| பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகள் | குறிகாட்டிகள் |
|---|---|
| நீர் | • தரம்,<br>• தொகை,<br>• பராமரிப்பு,<br>• ஒட்டுமொத்த திருப்தி |
| கழிவகற்றல் (குப்பை சேகரித்தல் மற்றும் அகற்றுதல்) | • சேவை வழங்கப்படும் பகுதி/சேவை உள்ளடக்கம்<br>• சேகரிக்கும் முறை<br>• கழிவகற்றும் முறைகள்<br>• உரிய நேரத்தில் சேகரித்தல்<br>• ஒட்டுமொத்த திருப்தி |
| வீதிகள் | • மழைக்காலங்களில் பராமரித்தல்/பழுதுபார்த்தல்<br>• பராமரிப்பு பணியின் தரம்<br>• குழிகளின்றி வீதிகளைப் பேணுதல்<br>• ஒட்டுமொத்த திருப்தி |
| வீதி விளக்கு | • வீதி விளக்குகளின் எண்ணிக்கை<br>• செயலிழப்புகளிற்கு பதிலளித்தல்<br>• வீதி விளக்குகளின் செறிவு/பிரகாசம்<br>• ஒட்டுமொத்த திருப்தி |
| வடிகால் வசதிகள் | • வடிகால் சுத்தம் செய்வதற்காக எடுக்கின்ற நேரம்<br>• பராமரிப்பு<br>• நிர்மாணிப்பு<br>• ஒட்டுமொத்த திருப்தி |
| விளையாட்டு மைதானங்கள் | • விளையாட்டு மைதானத்துக்கான அணுகல்<br>• பாதுகாப்பு நடவடிக்கை<br>• சுத்தம் செய்தல்<br>• வசதிகள் கிடைக்கும் தன்மை<br>• ஒட்டுமொத்த திருப்தி |
| நூலகம் | • திறக்கும் நேரம்<br>• பராமரிப்பு<br>• அண்மைய வெளியீடுகளின் கிடைக்கும் தன்மை<br>• வசதிகள் கிடைக்கின்ற தன்மை<br>• ஒட்டுமொத்த திருப்தி |

## 1.6 ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பிரதேசம்

கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு, மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர, மெதகம, மற்றும் மடுல்ல போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள பிரதேச சபைகள் மற்றும் கல்வி வலய அலுவலங்களுக்குட்பட்ட பல பிரதேசங்களை இந்த ஆய்வானது உள்ளடக்கியுள்ளது.

| பிரதேச செயலகபிரிவு/பிரதேச சபை/ வலயக்கல்வி அலுவலகம் | கிராமசேவகர் பிரிவு (GNs) | கிராமங்களின் எண்ணிக்கை | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவு / ஏறாவூர்பற்று பிரதேச சபை / மட்டகளப்பு மத்திய வலயக் கல்வி அலுவலகம் | மீராக்கேணி | 9 | 1485 |
| | மிச்நகர் | 7 | 2063 |
| | ஐயங்கேணி முஸ்லிம் | 3 | 840 |
| போறத்தீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவு / போறத்தீவுப்பற்று பிரதேச சபை / வெள்ளாவெளி–பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகம் | சின்னவத்தை | 3 | 435 |
| | கணேசபுரம் | 1 | 420 |
| | கோவில் போறத்தீவு மேற்கு | 1 | 415 |
| | வன்னிநகர் | 1 | 409 |
| | மாவேற்குடா | 3 | 434 |
| | செல்வபுரம் | 1 | 337 |
| மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவு / மண்முனை தெற்கு பிரதேச சபை /பட்டிப்பளை – மட்டகளப்பு மேற்கு வலயக் கல்வி அலுவலகம் | கடுக்காமுனை | 5 | 480 |
| | அரசடித்தீவு வடக்கு | 2 | 308 |
| | மகிழடித்தீவு தெற்கு | 3 | 576 |
| | முனைக்காடு மேற்கு | 4 | 327 |
| | முனைக்காடு வடக்கு | 2 | 369 |
| | கொக்கட்டிச்சோலை | 3 | 586 |
| | கிராண் கிழக்கு | 3 | 1197 |
| | கோரக்கள்ளிமடு | 3 | 677 |
| | தேவபுரம் | 2 | 656 |
| | திகிலிவேட்டை | 5 | 423 |
| கோரளைப்பறறு தெற்கு பிரதேச செயலகப் பிரிவு/ஓட்டமாவடி பிரதேச சபை/ கல்குடா வலயக் கல்வி அலுவலகம் | வாகனேரி | 5 | 462 |

# 2. முக்கிய கண்டறிவுகள்


## 2.1. சேவைகளின் கிடைக்கும் தன்மை, அணுகல் மற்றும் பயன்பாடு

குடிநீர் சேவைகள், நீர் வடிகால்,குப்பை சேகரித்தல் மற்றும் அகற்றுதல், வீதி மற்றும் ஒழுங்கைகளுக்கான அணுகல், வீதி விளக்குகள், விளையாட்டு மைதானங்கள், மற்றும் நூலக வசதிகள் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு சேவைகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு தொடர்பானதரவுகளை eCRC ஆய்வு சேகரித்தது. 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி - செப்டம்பர் மாதங்களில் இந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்தை பின்வரும் பிரிவுகள் முன்வைக்கின்றன. முதலாம் கட்டeCRC ஆய்வில் சேகரிக்கப்பட்ட அடிப்படை தரவுகள் மற்றும் இரண்டாம் கட்ட eCRCஆய்வில் சேகரிக்கப்பட்ட தரவுகள் முறையே முதலாம் கட்ட ஆய்வு (ஆய்வு 1) மற்றும் இரண்டாவது கட்ட ஆய்வு (ஆய்வு 2)என குறிப்பிடப்படுகின்றன.

### நீர்

**விளக்கப்படம் 1** இல் காட்டப்பட்டுள்ளவாறு, போறத்தீவுப்பற்று மற்றும் மண்முனை தென்மேற்கு போன்ற DS பிரிவுகளில் நீர் வழங்கல் சேவைகளின் பரம்பலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நான்கு மாத காலப்பகுதியில் நீர் வழங்கல் சேவையைப் பெற்றுக்கொள்கின்ற குடும்பங்களின் சதவீதம் கிட்டத்தட்ட இரட்டிப்பாகியுள்ளதோடு,கோரளைப்பற்று தெற்கு DS பிரிவும் ஓரளவு முன்னேற்றத்தைக் காட்டிநிற்கின்றது.

**விளக்கப்படம் 1: நீரின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு**





2018 பெப்ரவரியில் இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தலில் பொதுத் தேவைகளை அடையாளப்படுத்துவதில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பொதுத் தேவைகளை அடையாளப்படுத்துவதில் அதிகளவான ஈடுபாட்டினை செலுத்தியதன் காரணமாக இத்தகைய சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பராமரிப்பு பிரச்சினையால் நீர் வழங்கலில் ஏற்படுகின்ற தடை காரணமாக ஏறாவூர்பற்று DS பிரிவில் நீர் வழங்கல் சேவையின் கிடைக்கும் தன்மை குறைவடைந்துள்ளது.

**வீதிகள்**

**விளக்கப்படம்** 2 இல் காட்டப்பட்டுள்ளவாறு, இரண்டாம் கட்ட ஆய்வின் போது, ஏறாவூர்பற்று, மண்முனை தென்மேற்கு, மற்றும் கோரளைப்பற்று தெற்கு போன்ற DS பிரிவுகளில் போதுமான வீதிகள் மற்றும் ஒழுங்கைகளுக்கான அணுகலைக் கொண்டிருக்கின்ற குடும்பங்களின் விகிதம் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றமடைந்துள்ளதுடன்,80% இற்கும் அதிகமான குடும்பங்கள் போதுமான வீதிகள் மற்றும் ஒழுங்கைகளுக்கான அணுகலைக் கொண்டிருப்பதாக குறிப்பிட்டன. போறத்தீவுப்பற்று DS பிரிவில் இந்நிலைக் குறைவடைந்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது. அத்தோடு இப்பிரிவில், போதுமான வீதிகள் மற்றும் ஒழுங்கைகளைக் கொண்டிருக்கின்ற குடும்பங்களின் விகிதம் அரைப்பங்காக குறைவடைந்து 30% ஆக மட்டுமே காணப்படுவதாக இரண்டாம் கட்ட ஆய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதிகளவான மழைவீழ்ச்சி, பாதிக்கப்பட்ட வீதிகளை சீரமைப்பதற்கான திட்டமிடல் மற்றும் பராமரிப்பதில் உள்ள பற்றாக்குறை போன்றன இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற வீதிகளின் மோசமான நிலைமைக்கு காரணமாகின்றன.


**விளக்கப்படம் 2: வீதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு**




**வீதி விளக்குகள்**

இரண்டாம் கட்ட ஆய்வின் போது, நான்கு DS பிரிவுகளிலும் வீதி விளக்குகளின் கிடைக்கும் தன்மையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை **விளக்கப்படம்** 3 விளக்கி நிற்கின்றது.

**விளக்கப்படம் 3: வீதி விளக்குகளின் கிடைக்கின்ற தன்மை**




ஏறாவூர் பற்று DS பிரிவில்,பெரும்பாலானோர் (80%) அவர்களது பிரிவுகளில் வீதி விளக்குகள் காணப்படுகின்றன என்பதை சுட்டிக்காட்டியுள்ள அதேவேளை, மண்முனை தென்மேற்கு மற்றும் கோரளைப்பற்று தெற்கு போன்ற DS பிரிவுகளில் வீதி விளக்குகளின் கிடைக்கும் தன்மை கணிசமானளவு அதிகரித்துள்ளது. உடனடி கவனம் செலுத்தப்பட வேண்டிய பகுதிகளை சுட்டிக்காட்டிய 1 ஆவது CRC அறிக்கையின் வெளியிடப்பட்டதனால், பொதுத் தேவைகளை அடையாளப்படுத்துவதில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் செலுத்திய அதிகளவான ஈடுபாட்டின் காரணமாக இத்தகைய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.மேலும்,ஏற்கனவே காணப்படுகின்ற வீதி விளக்குகளின் சீரமைப்பு மற்றும் பாதுகாப்பு போன்ற காரணிகளும் இதற்கு பங்களிப்புச் செய்கின்றன.

### கழிவு சேகரிக்கும் சேவைகள்

கடந்த நான்கு மாதங்களில், ஆய்வுப் பகுதியில் உள்ள கழிவு சேகரிக்கும் சேவைகளின் அளவில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பை **விளக்கப்படம் 4** சுட்டிக்காட்டுகின்றது. ஏறாவூர்பற்று DS பிரிவில் கழிவு சேகரிக்கும் சேவைகளை 80% இற்கும் அதிகமானவர்கள் பெற்றுக்கொள்கின்ற அதேவேளை, இரண்டாம் கட்ட ஆய்வின் போது போறத்தீவுப்பற்று மற்றும் மண்முனை தென்மேற்கு பிரிவுகளில் கழிவு சேகரிக்கும் சேவைகளின் கிடைக்கும் தன்மையில் ஒரு குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. குடும்பத்தினர் கழிவு சேகரிக்கும் சேவைகள் தொடர்பாக விழிப்புணர்வினைப் பெற்றுள்ளமை மற்றும் தேரந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இப்பிரச்சினை தொடர்பாக செலுத்துகின்ற அதிகளவு கவனம் போன்றன இத்தகைய அதிகரிப்பிற்கு காரணமாகின்றன. நிதிப்பற்றாக்குறையின் காரணமாக சீரமைக்கப்படாமல் இருந்த கழிவு சேகரிக்கும் டிராக்டர்கள் பிரதேச சபை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டதன் பின்னர் சீரமைக்கப்பட்டு ஒழுங்கான முறையில் கழிவுகள் சேகரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**விளக்கப்படம் 4: கழிவகற்றல் சேவைகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு**





20 "பேச்சர்ஸ்" இற்கு மேற்பட்ட நிலப்பரப்பினைக் கொண்ட வீடுகளில் இருந்து உக்கும் தன்மையுடைய கழிவுகள் சேகரிக்கப்படாது என அண்மையில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு கழிவுகள் சேகரிக்கும் சேவைகளின் கிடைக்கின்ற தன்மை வரையறுக்கப்பட்டிருப்பதை புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. அந்தவகையில், இந்த கிராமப்புறங்களில் உள்ள பெரும்பாலான வீடுகள் 20 "பேச்சர்ஸ்" மேற்ப்பட்ட பரப்பினைக் கொண்டிருப்பதால் குறிப்பிட்ட சில பகுதிகளில் இருந்து கழிவுகள் கேரிக்கப்படாமல் இருப்பதற்கு இதுவே காரணமாகின்றது. மேலும், ஒரு குறிப்பிட்ட பிரிவில் கழிவுகளை சேகரிப்பதற்கு வழங்கப்படுகின்ற டிராக்டர்கள் (tractors) போன்ற வளங்களில் பற்றாக்குறை நிலவுவதாக பிரதேச சபைகள் சுட்டிக்காட்டின. அதுமட்டுமல்லாது, சில குடும்பங்கள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்திக்கு பொருட்களை எரிசக்தியாக அல்லது அடுப்புகளுக்கு எரியூட்டுவதற்காக பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எரியும் பிளாஸ்திக்கிலிருந்து வெளியேற்றப்படும் நச்சு வாயுக்கள் அபாயகரமானது என்பதால் சிறந்த கழிவு முகாமைத்ததுவ

முறைகள் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டும் வகையில் தேவையான விழிப்புணர்வினைக் கட்டியெழுப்புவது அவசியமாகின்றது.

### நூலக வசதிகள்

மண்முனை தென்மேற்கு DS பிரிவில் நூலக வசதிகள்[1] குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருப்பதுடன், 90% இற்கும் அதிகமான குடும்பங்கள் நூலக வசதிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதாக குறிப்பிட்டன. அத்தோடு, இரண்டாம் கட்ட ஆய்வின் போது, கோரளைப்பற்று தெற்கு DS பிரிவில் நூலக வசதிகள் குறைவடைந்துள்ளன.


**விளக்கப்படம் 5: நூலகம்/வாசிப்பு அறை வசதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு**




### வடிகால் வசதிகள்

இரண்டாம் கட்ட ஆய்வின் போது,போறத்தீவுப்பற்று மற்றும் மண்முனை தென்மேற்கு போன்ற வடிகால் வசதிகளின் கிடைக்கும் தன்மையில் ஒரு கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதை **விளக்கப்படம் 6** காட்டி நிற்கின்றது.

**விளக்கப்படம் 6: வடிகால் வசதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு**





[1] இவற்றில் சில வாசிப்பு அறைகளாக ( Reading Rooms ) இருந்தன. 3500 இற்கு மேற்பட்ட புத்தகங்களை கொண்டவைகள் நூலகங்களாக கருதப்பட்டன.

மழைக்காலங்களின் போது வடிகால் வசதிகள் தொடர்பான பராமரிப்புப் பணிகளை மூன்று பிரிவுகளிலும் உள்ள பிரதேச சபைகள் மேற்கொள்கின்றன என்பதை அப்பிரிவுகளில் உள்ள குடும்பங்களில் இருந்து பெறப்பட்ட கருத்துக்கள் பிரதிபலிக்கின்றன. இருப்பினும்,இரண்டாம் கட்ட ஆய்வின் போது, ஏறாவூர் பற்று மற்றும் கோரளைப்பற்று தெற்கு DS பிரிவுகளில் 10% இற்கும் குறைவானவர்களே வடிகால் வசதிகளைப் பெற்றுக்கொள்வதாக குறிப்பிட்டதோடு, பெரும்பாலும் இப்பிரிவுகளில் காணப்படுகின்ற வடிகால் முறைகளின் பராமரிப்பிலுள்ள பற்றாக்குறையே இதற்கு காரணமாகும்.

### விளையாட்டு மைதானங்கள்

இரண்டாம் கட்ட ஆய்வின் போது, போறத்தீவுப்பற்று DS பிரிவினைத் தவிர ஏனைய ஆய்வுப் பிரதேசங்களில் விளையாட்டு மைதானங்களுக்கான அணுகல் குறைவடைந்துள்ளதை **விளக்கப்படம் 7** விளக்கிநிற்கின்றது. மழைக்காலங்களில் மைதானங்களின் பராமரிப்பிலுள்ள பற்றாக்குறை மற்றும் பொதுப்பயன்பாட்டிற்கென மைதானங்களை குறைந்தளவான நிபந்தனைகளுடன் வழங்குதல் போன்றன இதற்கான காரணங்களாக அமைகின்றன.

**விளக்கப்படம் 7: விளையாட்டு மைதானங்களின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு**




## 2.2. பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகள் மீதுள்ள ஒட்டுமொத்த திருப்தி


இந்த ஆய்வின் கீழ் ஆய்வு செய்யப்பட்ட பொதுச்சேவைகள் குறித்த சேவைப் பெறுநர்களின் திருப்தி மட்டங்கள் தொடர்பானதரவுகளையும் eCRC ஆய்வு சேகரித்தது. முதலாம் கட்டeCRC ஆய்வில் சேகரிக்கப்பட்ட அடிப்படை தரவுகள் மற்றும் இரண்டாம் கட்ட eCRCஆய்வில் சேகரிக்கப்பட்ட தரவுகள் முறையே முதலாவது கட்ட (ஆய்வு 1) மற்றும் இரண்டாவது கட்ட (ஆய்வு 2) என குறிப்பிடப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ள விளக்கப்படங்கள் உயர் திருப்தி மட்டங்களை மட்டுமே கொண்டுள்ளன.

### நீர்

**விளக்கப்படம் 8** இல் காட்டப்பட்டுள்ளவாறு, இரண்டாம் கட்ட ஆய்வில் போறத்தீவுப்பற்று, மண்முனை தென்மேற்கு, மற்றும் கோரளைப்பற்று தெற்கு போன்ற பிரிவுகளில் நீர் வழங்கல் சேவைகள் குறித்த திருப்தி மட்டங்கள் ஒரு குறிப்பிட்டளவு அதிகரித்துள்ளது. கோரளைப்பற்று DS பிரிவில்,பிரதேச சபைகள்

பொதுமக்களுக்கு அதிகளவான நீர்த்தாங்கிகளை வழங்கியுள்ளன அத்தோடு பெரும்பாலும் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்ற சேவையாக இது காணப்படுகின்றது. மண்முனை தென்மேற்கு DS பிரிவிலுள்ள ஒரு கிராமத்திற்கு குழாய் மூலம் நீர் வழங்கப்படுகின்றது.ஏனைய பிரதேசங்களுக்கும் இதே போன்ற நீர் வழங்கலை மேற்கொள்வதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஏறாவூர்பற்று DS பிரிவில் திருப்தி மட்டத்தில் ஏற்பட்ட ஒரு சிறியளவான சரிவானது, இப்பிரிவிலுள்ள நீர் வழங்கலை பாதிக்கின்ற காரணியாக இருப்பதோடு, இப்பிரதேசத்தில் நிலவுகின்ற சிறுநீரக நோய் போன்ற சுகாதார பிரச்சினைகள் காரணமாக நீரின் தரம் குறித்து பொதுமக்கள் சந்தேகிப்பதற்கும் காரணமாக அமைகின்றது.


**விளக்கப்படம் 8: நீர் வழங்கல் தொடர்பான திருப்தி**




### வீதிகள்

இரண்டாம் கட்ட ஆய்வின் போது, வீதி உட்கட்டமைப்பு வசதிகளோடு தொடர்புடைய உயர்ந்தளவான திருப்தி மட்டங்கள் போறத்தீவுப்பற்று, மண்முனை தென்மேற்கு, மற்றும் கோரளைப்பற்று தெற்கு போன்ற DS பிரிவுகளில் அதிகரித்துள்ளதை **விளக்கப்படம் 9** காட்டிநிற்கின்றது.

**விளக்கப்படம் 9: வீதிகள் தொடர்பான திருப்தி**





போறத்தீவுப்பற்று மற்றும் மண்முனை தென்மேற்கு போன்ற DS பிரிவுகளில் வீதிகள் தொடர்பான திருப்தியின் அதிகரிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கதாக அமைகின்றது. முக்கியமாக, இம்மூன்று பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்ட வீதி ஒழுங்குபடுத்தல், வீதி பராமரிப்பு மற்றும் வீதி மேம்படுத்தல்

போன்ற நடவடிக்கைகள் போன்றன இவ்வதிகரிப்பிற்கு காரணமாகின்றன. இருப்பினும், ஏறாவூர்பற்று DS பிரிவில், பராமரிப்பு பணியிலுள்ள பற்றாக்குறை மற்றும் வீதிகளை பாதிக்கின்ற வடிகால் பிரச்சினைகள் காரணமாக கடந்த நான்கு மாதங்களில் வீதிகள் குறித்த திருப்தியானது குறைவடைந்துள்ளது. மேலும்,ஆலை உரிமையாளர்கள் இப்பகுதியிலுள்ள பெரும்பாலான வீதிகள் மீது ஆதிக்கம் செலுத்துவதோடு, கனரக வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக இந்த சாலைகளைப் பயன்படுத்துகின்றனர் இதனால் வீதிகளைப் பயன்படுத்துவதற்கு பொதுமக்களுக்கு தடை ஏற்படுகின்றது. அதுமட்டுமின்றி, இப்பகுதி மாசடைவதற்கு இந்த ஆலைகள் பங்களிப்புச் செய்கின்றன.

### வீதி விளக்குகள்

**விளக்கப்படம் 10** இல் காட்டப்பட்டுள்ளவாறு, இரண்டாம் கட்ட ஆய்வின் போது ஏறாவூர்பற்று, மண்முனை தென்மேற்கு, மற்றும் கோரளைப்பற்று தெற்கு போன்ற DS பிரிவுகளில் வீதி விளக்குகள் மீதான திருப்தி மட்டங்கள் அதிகரித்துள்ளது. இப்பிரிவுகளில் புதிய வீதி விளக்குகளை நிறுவியமை அதேபோல ஏற்கனவே உள்ள வீதி விளக்குகளை முறையாக பராமரிக்கின்றமை போன்றன இதற்கான காரணங்களாக அமைகின்றன. இருப்பினும் போறத்தீவுப்பற்று DS பிரிவில்,வீதி விளக்குகள் தொடர்பான திருப்தியானது குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளது. குறிப்பிட்ட பிரிவிற்குள் போதுமான வீதி விளக்குகள் இல்லாமையே இதற்கான காரணமாகும். மிகவும் தொலைவில் அமைந்துள்ள குடும்பங்களை காட்டு மிருகங்கள் தாக்கக்கூடிய ஆபத்து இருப்பதால், ஒவ்வொரு வீடுகளின் முன்பும் வீதி விளக்குகள் இருக்க வேண்டும் என்பதே இக்குடும்பங்களின் எதிர்ப்பார்ப்பாக இருக்கின்றது.

**விளக்கப்படம் 10: வீதி விளக்குகள் தொடர்பான திருப்தி**





### நூலக வசதிகள்

போறத்தீவுப்பற்று, மண்முனை தென்மேற்கு, மற்றும் கோரளைப்பற்று தெற்கு போன்ற DS பிரிவுகளில் நூலக வசதிகளுடனான திருப்தி குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதுடன், இரண்டாம் கட்ட ஆய்வின் போது, குறைந்தது மூன்றில் ஒரு பங்கான குடும்பங்கள் நூலக வசதிகளின் கிடைக்கும் தன்மைக் குறித்து உயர்ந்தளவான திருப்தியை வெளிப்படுத்தியுள்ளன.

நூலக உபகரணங்கள் மற்றும் வளங்களை மேலதிகமாக கொண்டிருக்கின்ற போறத்தீவுப்பற்று மற்றும் மண்முனை தென்மேற்கு போன்ற DS பிரிவுகளில் காணப்படுகின்ற மேம்பட்ட திருப்தியானது சில முன்னேற்றங்களை குறித்துக் காட்டுவதாக அமைகின்ற அதேவேளை, கோரளைப்பற்று DS பிரிவில் புதிய வாசிப்பறை ஒன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், முதலாம் கட்ட ஆய்வின் போது பலர் நூலக வசதிகள் குறித்து விழிப்புணர்வினைப் பெற்றிருக்கவில்லை ஆனால், இரண்டாம் கட்ட ஆய்வின் போது குறிப்பாக, கோரளைப்பற்று தெற்கு பிரிவில் பொதுமக்கள் மத்தியில் நூலக வசதிகள் தொடர்பில் ஒரு

சிறந்த விழிப்புணர்வு காணப்படுகின்றது. இருப்பினும்,அனுகல் பிரச்சினைகளில் பங்களிப்புச் செய்யும் நூலகங்களை திறக்கின்ற மற்றும் மூடுகின்ற நேரங்கள், போதிய புத்தகங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் இன்மை மற்றும் போதுமான தளபாடங்களின் பற்றாக்குறை காரணமாக, ஏறாவூர்பற்று DS பிரிவில் திருப்தி மட்டங்களானது குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளது.


**விளக்கப்படம் 11: நூலக வசதிகள் தொடர்பான திருப்தி**




## வடிகால் வசதிகள்

இரண்டாம் கட்ட ஆய்வின் போது, போறத்தீவுப்பற்று மற்றும் மண்முனை தென்மேற்கு போன்ற DS பிரிவுகளில் வடிகால் வசதிகள் குறித்த திருப்தி மட்டங்களானது அதிகரித்துள்ள அதேவேளை, ஏறாவூர் பற்று மற்றும் கோரளைப்பற்று தெற்கு போன்ற DS பிரிவுகளில் இச்சேவைக் குறித்த திருப்தி மட்டங்களில் மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. மழைக்காலங்களுக்கான வடிகால் முறைகளை தயார்படுத்துவதற்காக பராமரிப்பு பணிகளை முன்னெடுத்ததன் காரணமாக போறத்தீவுப்பற்று மற்றும் மண்முனை தென்மேற்கு போன்ற DS பிரிவுகளில் இச்சேவைக் குறித்த திருப்தி மட்டங்கள் அதிகரித்துள்ளது. வீதி உட்கட்டமைப்பு பணிகளின் போது வடிகால்கள் தடைப்பட்டமை, கன மழையின் போது வீதிகளில் ஏற்படுகின்ற வெள்ளத்தினால் வடிகால்கள் அமைந்திருக்கும் இடத்தினைக் கண்டறிவது கடினமாகின்றமை, மற்றும் அரிசி ஆலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் வடிகால்களை தடைசெய்கின்றமை போன்ற காரணங்களால் ஏறாவூர் பற்று பிரிவில் இச்சேவைக் குறித்த திருப்தி ஏற்படவில்லை. இக்கிராமங்கள் மிகவும் தொலைவில் அமைந்துள்ளமை மற்றும் கழிவுகள், குப்பை மற்றும் சேற்றினால் நிரப்பட்ட வடிகால் முறைகள் குறைந்தளவிலேயே பராமரிக்கப்படுகின்றமை போன்ற காரணங்களால் கோரளைப்பற்று DS பிரிவிலும் இச்சேவைக் குறித்து திருப்தி ஏற்படவில்லை.


**விளக்கப்படம் 12: வடிகால் வசதிகள் தொடர்பான திருப்தி**



### விளையாட்டு மைதானங்கள்

திருப்தி மட்டங்கள் கணிசமானளவு குறைவடைந்திருப்பதை அவதானிக்கக்கூடிய ஏறாவூர் பற்று DS பிரிவு தவிர்ந்த ஏனை அனைத்து பிரிவுகளிலும் விளையாட்டு மைதானங்கள் குறித்த திருப்தி மட்டங்கள் அதிகரித்துள்ளது என்பதை **விளக்கப்படம் 13** இல் காட்டப்பட்டுள்ளது. ஏறாவூர்பற்று DS பிரிவில் ஒரேயொரு பொது விளையாட்டு மைதானம் காணப்படுவதோடு அக்குறிப்பிட்ட மைதானமானது பல்வேறு கிராமசேவகர் பிரிவுகளால் பயன்படுத்தப்படுகின்றமையே இதற்கான காரணமாக குறிப்பிடப்பட்டது. இதனால் விளையாட்டு மைதானத்தினை பயன்படுத்த விரும்பும் பல்வேறு குழுக்களுக்கிடையில் மோதல்கள் ஏற்படுகின்றன. போறதீவு பற்று பிரிவில் காணப்படுகின்ற விளையாட்டு மைதானத்தை மீள விருத்தி செய்தல் மற்றும் மண்முனை தென்மேற்கு மற்றும் கோரளைப்பற்று DS பிரிவுகளில் உள்ள விளையாட்டு மைதானங்களுக்கான உபகரணங்களை வழங்குதல் போன்ற காரணங்களால் திருப்தி மட்டங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.


**விளக்கப்படம் 13: விளையாட்டு மைதான வசதிகள் தொடர்பான திருப்தி**




### கழிவு சேகரிக்கும் சேவைகள்

இரண்டாம் கட்ட ஆய்வின் போது,போறத்தீவுப்பற்று, மற்றும் கோரளைப்பற்று தெற்கு போன்ற DS பிரிவுகளில் கழிவு சேகரிக்கும் சேவைகள் தொடர்பான திருப்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை **விளக்கப்படம் 14** காட்டி நிற்கின்ற அதேவேளை, ஏறாவூர்பற்று மற்றும் மண்முனை தென்மேற்கு போன்ற DS பிரிவுகளில் திருப்தி மட்டமானது குறைவடைந்துள்ளது.

**விளக்கப்படம் 14: கழிவு சேகரிக்கும் சேவைகளுடனான திருப்தி**




மண்முனை தென்மேற்கு DS பிரவில் திருப்தி மட்டங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியானது மிகவும் குறிப்பிடத்தக்கதாக உள்ளதோடு, கழிவு சேகரிக்கும் சேவைகள் அடிக்கடி மேற்கொள்ளப்படாமை மற்றும் பிரிவுகளுக்குள் காணப்படுகின்ற சில கிராமங்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டிருக்கின்றமை போன்றன இதற்கான காரணங்களாக அமைகின்றன. அதேபோல ஏறாவூர்பற்று DS பிரிவிலும், உட்புறத்தில் அமைந்துள்ள கிராமங்களுக்கு கழிவு சேகரிக்கும் சேவைகள் வழங்கப்படாததால் திருப்தி மட்டமானது ஓரளவு குறைவடைந்துள்ளது. போறத்தீவுபற்று மற்றும் கோரளைப்பற்று போன்ற DS பிரிவுகளில் அடிக்கடி மற்றும் நேரத்திற்கு கழிவு சேகரிக்கப்படுவதால் இச்சேவைக் குறித்த திருப்தி மட்டமானது அதிகரித்துள்ளது.

# 2.3. மேலதிக செலவுகள் மற்றும் முறைப்பாடுகள்

## 2.3.1. சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான செலவுகள்

சேவைகளைப் பெற்றுக்கொள்கின்ற போது பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற மறைமுக செலவுகளிலும் ஆய்வானது கவனம் செலுத்துகின்றது. மறைமுக செலவுகளின் தன்மை மற்றும் அவை நிகழ்வதை புரிந்துகொள்வதன் மூலம் இத்தகைய செலவுகள் சட்டபூர்வமானதா அல்லது அவசியமானதா என்பதை தீர்மானிப்பதற்கான ஒரு வழிமுறையினை அரசாங்க அதிகாரிகளுக்கு (சேவை வழங்குநர்களுக்கு) வழங்க முடியும்.

**விளக்கப்படம் 15: சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது ஏற்படும் மறைமுக செலவுகள்/கட்டணங்கள்**




முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட ஆய்வுகளின் போது,பெரும்பாலான சேவைப் பெறுநர்கள் அவர்கள் பெற்றுக்கொள்ளும் சேவைகளுக்கு கட்டணங்கள் செலுத்தப்படவில்லை/மறைமுக செலவுகள் ஏற்படவில்லை என சுட்டிக்காட்டியிருந்தனர். இருப்பினும், பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகளைப் (**விளக்கப்படம் 15** ஐப் பார்க்கவும்) பெற்றுக்கொள்வதற்காக செலவுகள் ஏற்பட்டதாக சில குடும்பங்கள் குறிப்பிட்டிருந்தன. சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு செலவுகள் ஏற்பட்டதாக தெரிவித்த குடும்பங்களின் விகிதம் ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தாலும்,நீர் வழங்கல் (54 சம்பவங்கள்), நூலக வசதிகள் (37 சம்பவங்கள்), வீதி உட்கட்டமைப்பு வசதிகள் (23 சம்பவங்கள்),வீதி விளக்குகள் (25 சம்பவங்கள்), கழிவு சேகரித்தல் (23 சம்பவங்கள்), விளையாட்டு மைதானம் (22 சம்பவங்கள்) மற்றும்


வடிகால் வசதிகள் (8 சம்பவங்கள்) போன்ற சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு செலவுகள் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவான சம்பவங்களை பதிலளிப்பாளர்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

வீதி விளக்குகளைப் பொறுத்தவரையில், குடியிருப்பாளர்கள் அவர்களுடைய வீடுகளுக்கு அருகிலுள்ள வீதி விளக்குகளுக்குத் தேவையான மின்சாரத்தினை வழங்க தங்களுடைய மின்சார வழங்கலினைப் பயன்படுத்துவதன் காரணமாக இத்தகைய செலவுகள் ஏற்படுகின்றன. வீதி விளக்குகளுக்கான மின்சாரம் வழங்கப்படாமை அதேபோல சேதமடைந்த விளக்குகளுக்கான மாற்றீடு வழங்கப்படாத சந்தர்ப்பங்களில் இத்தகைய செலவுகள் ஏற்படுகின்றன. வீதி சேவைகளுடன் தொடர்புடைய செலவினங்களை பொறுத்தமட்டில், வீதிகளை பராமரிக்கின்ற குழுக்களுக்கு வழங்கப்படுகின்ற சிற்றுண்டிகளுக்காக (தேநீர்) சமூகத்தால் மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளோடு தொடர்புடைய வகையில் விளக்கமுடியும். நீர் வழங்கல் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்காக சேவை பெறுநர்களுக்கு விதிக்கப்படுகின்ற கட்டணங்களே இச்சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்படுகின்ற செலவுகளாக அமைகின்ற அதேவேளை,நூலக உறுப்பினராவதற்காக செலுத்தப்படுகின்ற கட்டணத்தின் அடிப்படையில் நூலக வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக செலவுகள் ஏற்படுகின்றன. வடிகால் வசதிகளைப் பொறுத்தவரை, சில குடும்பங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் மீது குழாய்கள் அமைத்துள்ளமைக் காரணமாக செலவுகள் ஏற்படுகின்றன. சில குடும்பங்கள் கழிவு சேகரிப்பவர்களுக்கு தாமாகவே பணம் செலுத்துவதன் காரணமாக கழிவு சேரிக்கும் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கு செலவுகள் ஏற்படுகின்றன. இருந்த போதிலும், மறைமுக/மேலதிக செலவுகளின் சிக்கல் தொடர்பான சிறந்த தெளிவினைப் பெற்றுக்கொள்வதற்கு, சேவைப் பெறுநர்களுக்கான செலவுகளை எவ்வாறு, எங்கு பிரதேச சபை சேவைகள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை மேலும் ஆராய்வது அவசியமாகின்றது.

## 2.3.2. முறைப்பாடுகள்/மனக்குறைகளுக்கான பதிலளிப்பு

நான்கு DS பிரிவுகளிலும், முறைப்பாடுகள்/மனக்குறைகளுக்கு, உள்ளூராட்சி/சேவை வழங்குநர்களால் வழங்கப்பட்ட பதிலளிப்புகளின் அளவினை **விளக்கப்படம் 16** காட்டிநிற்கின்றது.


**விளக்கப்படம் 16: முறைப்பாடுகள்/மனக்குறைகளுக்கான பதிலளிப்புகள்**




இரண்டாம் கட்ட ஆய்வின் போது போறதீவுப்பற்று DS பிரிவில் பொதுமக்கள் முறைப்பாடுகளிற்கான பதில் குறித்து குறிப்பிடத்தக்க மேம்பாடு ஏற்பட்டுள்ளதை காண முடிகிறது. 55% ஆன பதிலளிப்பாளர்கள் தாம் பதில்களை பெற்றுக் கொள்வதாக குறிப்பிட்டு இருந்தனர். எனினும் ஏறாவூர் பற்று, மண்முனை தென்மேற்கு மற்றும் கோறளைப்பற்று DS பிரிவுகளில் பொதுமக்கள் வழங்கிய முறைப்பாடுகளுக்கான பதில்கள் தொடர்பில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 45% இற்கும் குறைவானவர்களே தாம் பதில்களை பெற்றுக் கொள்வதாக குறிப்பிட்டிருந்தனர்.

பெரும்பாலான பதிலளிப்பாளர்கள் தமது மனக்குறைகள்/முறைப்பாடுகளுக்கு பெற்றுக் கொள்ளும் பதில் குறித்து குறைந்தளவு திருப்தியை கொண்டிருப்பதை **விளக்கப்படம் 17** விளக்கி நிற்கின்றது. நான்கு DS பிரிவுகளிலும், உயர்ந்தளவான திருப்தி நிலையானது மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. அதிகாரிகள்/சேவை வழங்குநர்களால் முறைப்பாடுகள்/மனக்குறைகள் கையாளப்படும் விதங்களில் வேறுபட்ட குறைபாடுகள் இருப்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

**விளக்கப்படம் 17: முறைப்பாடுகள்/மனக்குறைகளுக்கு வழங்கப்பட்ட பதிலளிப்புகளுடனான திருப்தி**



# 3. பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்கான ஒட்டுமொத்த மதிப்பீடு

நான்கு DS பிரிவுகளிலும் உள்ள பிரதேச சபைகள் மூலம் வழங்கப்படுகின்ற பொது சேவைகளின் செயற்திறனுக்கு கொடுக்கப்பட்ட மதிப்பீட்டினை **விளக்கப்படம் 18** சுட்டிக்காட்டுகின்றது. ஆய்வுப் பிரதேசங்களின் பொது சேவைப் பயனர்கள் திருப்தியடைந்த சதவீதங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 18** இல் உள்ள நிறக்குறியீடுகள் பின்வருவனவற்றை குறிக்கின்றன.

| **நிறம்** | **உயர்திருப்தியுடைய பயனர்களின் %** | **தேவைப்படும் நடவடிக்கை** |
|---|---|---|
| (சிவப்பு) | 40%இற்கும் குறைவான திருப்தியுடைய பயனர்கள் | உடனடி கவனம் தேவை |
| (மஞ்சள்) | 40%-60%இற்கு இடைப்பட்ட திருப்தியுடைய பயனர்கள் | முன்னேற்றம் தேவை |
| (பச்சை) | 60% இற்கும் அதிகமான திருப்தியுடைய பயனர்கள் | செயல்திறனைப் பராமரிக்க வேண்டும் அல்லது முன்னேற்றங்களை தொடர்வது அவசியம் |

**திருப்தியான பயனர்களுள் உயர்ந்த மற்றும் நடுத்தர திருப்தியடைந்த சேவை பயனர்கள் உள்ளடக்கப்படுகின்றனர்*

திருப்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு முன்னேற்றமடைந்த பகுதிகளை **விளக்கப்படம் 18** காட்டிநிற்கின்றது, மேலும் இரண்டாம் கட்ட ஆய்வின் போது பெறப்பட்ட சேவை வழங்கல் தொடர்பான மதிப்பீடுகள் அட்டவணையில் (60% இற்கும் அதிகமான திருப்தி மட்டமானது) பச்சை நிறத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாம் கட்ட ஆய்வின் போது பெரும்பாலான சேவைகள் மீதான திருப்தி மட்டங்கள் முன்னேற்றமடைந்துள்ளது (மேல் நோக்கி அமைந்துள்ள அம்புக்குறிகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது). இருப்பினும், மேலும் முன்னேற்றமடைவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதோடு பிரதேச சபைகளினால் வழங்கப்படுகின்ற தொடரச்சியான கவனிப்புகள் மூலமாக சில சேவைப்பகுதிகள் நன்மை அடையக்கூடும்.

ஆய்வு 1இன் பின்னர், சேவை வழங்குநர்கள் சமூகத்தினருடன் தொடர்பு கொண்டு, சேவை முன்னேற்றத்திற்கான செயற்பாட்டுத்திட்டங்களில் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தமையே சில சேவைகள் மீதான திருப்தி மேம்பட்டிருப்பதற்கான முக்கிய காரணமாகும். 1 ஆவது CRC ஆய்விறிக்கையை தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொதுமக்களின் தேவைகளை அடையாளம் காண்பதில் ஆர்வம் காட்டியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. பொதுவாக, பிரதேச சபை சேவைகள் குறித்து பொதுமக்கள் மத்தியிலான விழிப்புணர்வு அதிகரித்திருக்கின்ற அதேவேளை, பிரதேச சபைகளின் நடவடிக்கைகள் குறித்து அநேகமான ஊடகங்கள் கவனம் செலுத்துகின்றன.

**விளக்கப்படம் 18: சேவைகள் தொடர்பான ஒட்டுமொத்த மதிப்பீடு**

| | நீர் | கழிவு சேகரித்தல் | வீதிகள் | வீதி விளக்ககள் | வடிகாலமைப்பு | விளையாட்டு மைதானம் | நூலகம் |
|---|---|---|---|---|---|---|---|
| **ஆய்வு 2** | | | | | | | |
| ஏறாவூர் நகர் | 100% ↑ | 93% ↑ | 69% ↓ | 90% ↑ | | 91% ↑ | 95% ↑ |
| கோரளைப்பற்று தெற்கு | 68% ↓ | 94% ↑ | 55% ↑ | 64% = | | 57% ↓ | 79% ↑ |
| மண்முனை தென்மேற்கு | 89% | 72% ↑ | 71% ↑ | 52% ↑ | 67% | 83% = | 94% ↑ |
| போறத்தீவுப்பற்று | 95% ↑ | 92% ↑ | 90% ↑ | 71% ↑ | 57% | 74% ↑ | 100% ↑ |
| **ஆய்வு 1** | | | | | | | |
| ஏறாவூர் நகர் | 99% | 89% | 79% | 80% | 39% | 84% | 93% |
| கோரளைப்பற்று தெற்கு | 73% | 49% | 48% | 64% | | 59% | 69% |
| மண்முனை தென்மேற்கு | | 94% | 48% | 40% | | 83% | 93% |
| போறத்தீவுப்பற்று | 39% | 32% | 38% | 58% | | 50% | 67% |

40% இற்கும் குறைவான திருப்தியுடைய பயனர்கள்

40%-60% இற்கு இடைப்பட்ட திருப்பியுடைய பயனர்கள்

60% இற்கும் அதிகமான திருப்தியுடைய பயனர்கள்


# 4. பரிந்துரைகள்

## 4.1. சேவை அடிப்படையில் முன்னேற்றத்தினை வேண்டி நிற்கின்ற பகுதிகள்

### 4.1.1. உடனடி சேவை மேம்பாட்டினை வேண்டி நிற்கின்ற பகுதிகள்

அடையாளம் காணப்பட்ட உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற பல சேவைப் பகுதிகளை இரண்டாம் கட்ட இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை (eCRC) ஆய்வு காட்டி நிற்கின்றது. இது தொடர்பாக **விளக்கப்படம் 19** இல் சுருக்கமாக தரப்பட்டுள்ளது. போறத்தீவுப்பற்ற மற்றும் கோரளைப்பற்று தெற்கு DS பிரிவுகளில் வீதிகள், வீதி விளக்குகள் மற்றும் வடிகாலமைப்பு வசதிகள் போன்றன மேம்பாட்டிற்காக அடையாளப்படுத்தப்பட்ட முன்னுரிமை சேவைகளாக காணப்படுகின்றன. மண்முனை தென்மேற்கு DS பிரிவில் வீதி விளக்குகள், வடிகாலமைப்பு வசதிகள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் போன்றன மேம்பாட்டிற்காக அடையாளப்படுத்தப்பட்ட முன்னுரிமை சேவைகளாக காணப்படுகின்றன. இந்த முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகளின் உடனடி மேம்பாட்டிற்கான நடவடிக்கையினை கவனத்தில் கொள்ள வேண்டும் அத்தோடு அடுத்த வரவு செலவுத்திட்டத்தில் இச் சேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.


**விளக்கப்படம் 19: பிரதேச செயலகப் பிரிவின் அடிப்படையில் உடனடி கவனம் செலுத்தப்பட வேண்டிய முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகள்**





முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட ஆய்வுகளுக்கமைய, ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் உடனடி சேவை முன்னேற்றங்களை வேண்டி நிற்கின்ற பகுதிகளை பின்வரும் **விளக்கப்படங்கள் 20, 21,**

22 மற்றும் 23 ஆகியவற்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இரண்டாம் கட்ட ஆய்வின் போது சேவை மேம்பாடுகள் காரணமாக, சில சந்தர்ப்பங்களில் முன்னேற்றங்களை வேண்டி நிற்கின்ற சேவைகளுக்கான முன்னுரிமையானது சிறிது மாற்றமடைந்துள்ளது. இருப்பினும், முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட ஆய்வுகளுக்கிடையிலான இத்தகைய முன்னுரிமைகளில் ஆதிக்கம் செலுத்துகின்ற சிறிய மாறுபாடானது, இச்சேவைகளுக்கான தொடர்ச்சியான மேம்பாடுகள் அவசியம் என்பதை சுட்டிக்காட்டுகின்றது.


**விளக்கப்படம் 20: ஏறாவூர்பற்று DS பிரிவில் மேம்படுத்தப்பட வேண்டிய முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகள்**





**விளக்கப்படம் 21: கோறளைப்பற்று தெற்கு DS பிரிவில் மேம்படுத்தப்பட வேண்டிய முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகள்**



**விளக்கப்படம் 22: மண்முனை தென்மேற்கு DS பிரிவில் மேம்படுத்தப்பட வேண்டிய முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகள்**




**விளக்கப்படம் 23: போறத்தீவுப்பற்று DS பிரிவில் மேம்படுத்தப்பட வேண்டிய முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகள்**



பொதுவாக பொதுச்சேவைகளின் வழங்கல் தொடர்பாக பதிலளித்தவர்கள் அதிருப்தியை வெளிப்படுத்திய சந்தர்ப்பங்களில், தேவையான வசதிகளின் பற்றாக்குறை, வசதிகளை பராமரிப்பதில் உள்ள பற்றாக்குறை (சேதமடைந்த வீதிகள், வடிகால் அமைப்பு முறைகள், வீதி விளக்குகளின் பற்றாக்குறை போன்றன) காரணமாக ஏற்படுகின்ற பாதுகாப்பின்மை, கிடைக்கின்ற வசதிகள் குறித்து பொது மக்கள் அறிந்திருக்காமை, முறைப்பாடுகளை அடையாளங் காண்பதில் அரசாங்க அதிகாரிகளிடமிருந்து கிடைக்கின்ற பதில்கள் மோசமான நிலையில் காணப்படுகின்றமை, பொருத்தமான அதிகாரிகளிடமிருந்து முறையான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை இன்மை, அரசியல் தடைகள் மற்றும் நிதி ஒதுக்கீட்டிலுள்ள பற்றாக்குறை போன்றவற்றின் காரணமாக ஏற்படுகின்ற தாமதங்கள் போன்றன அதிருப்திக்கான காரணங்களாக அவர்கள் அடையாளப்படுத்தினர். பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகளை முன்னேற்றுவதற்காக பதிலளித்தவர்களால் வழங்கப்பட்ட பரிந்துரைகளானவை, பயனுள்ள சேவை வழங்கல் தொடர்பாக அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் இன்னும் பொறுப்புடையவர்களாக இருக்க வேண்டிய அவசியம், சேவை வழங்கல் தொடர்பான சிறந்த திட்டமிடல் மற்றும் கண்காணிப்பினை உறுதிப்படுத்துதல், கிராம மட்டத்தில் சேவை பெறுநர்களிடம் கலந்துரையாடல், மற்றும் பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல் போன்றவற்றினை வலியுறுத்துகின்றன.

### 4.1.2. ஏனைய பரிசீலனைகள்

சேவைகளை முன்னேற்றுவதற்கான வாய்ப்புகளை அடையாளம் காண்பதற்கான காலமானது (முதலாம் கட்ட ஆய்விற்கும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்விற்கும் இடையில் நான்கு மாதங்கள்மட்டுமே காணப்பட்டன) பிரதேச சபைக்கு வரையறுக்கப்பட்டிருந்தது. சேவை வழங்கலில் ஏற்பட்டுள்ள குறிப்பிட்டளவு முன்னேற்றத்தினைக் கொண்டு, பிரதேச சபைகள் நியாயமான முறையில் செயற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இந்த ஆய்வின் கண்டறிவுகள் (குறிப்பாக விளக்கப்படம் 18 இல் வழங்கப்பட்ட மதிப்பீடுகள்) முன்னேற்றத்தை அளவிடுவதற்காகவும், அடையாளம் காணப்பட்ட சேவைகள் குறித்து மேலும் நெருக்கமான கவனம் செலுத்துவதற்கும் இந்த ஆய்வின் கண்டறிவுகள் பயன்படுகின்றது. இந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்ட சேவை வழங்கல் இடைவெளிகளை எவ்வாறு அடையாளப்படுத்த முடியும் என்பதை புரிந்துகொள்ள இவ்விடயம் மேலும் நெருக்கமாக ஆராயப்பட வேண்டும். மேலும், பொது சேவை வழங்கலை முன்னேற்றுவதற்கான எதிர்கால தலையீடுகளை திட்டமிடுவதற்கு, அடையாளப்படுத்தப்பட்ட உடனடி சேவை முன்னேற்றம் தேவைப்படும் பகுதிகளை கவனத்தில் கொள்ள வேண்டும். அத்தோடு, பிரதேச சபை சேவை வழங்கலின் முன்னேற்றங்களை கண்காணிப்பதற்கு இதுபோன்ற ஆய்வுகளை குறைந்தது ஒரு வருடத்திற்கு ஒரு முறையாவது பிரதேச சபைகள் மேற்கொள்ள வேண்டும் என்பதையும் பதிலளித்தவர்கள் தெரிவித்திருந்தனர்.

## 4.2. முன்னோக்கிய நகர்வு

2018 மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வின் ஆரம்ப கண்டறிவுகளை அடிப்படையாகக்கொண்டு செயற்பாட்டுத் திட்டங்கள் (இணைப்பு 1 ஐப் பார்க்கவும்) தயாரிக்கப்பட்டுள்ளன. உள்ளூர் அரச சிரேஷ்ட அதிகாரிகள், ACLGs, பிரதேச சபை செயலாளர்கள், தவிசாளர்கள்,மற்றும் சமூக பிரதிநிதிகளுக்கு இக்கண்டறிவுகள் வழங்கப்பட்டன. 2018 ஒக்டோபர் மாதத்தில் இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் இரண்டாவது ஆய்வினை மேற்கொள்வதற்கு முன்னர், பிரதேச சபைகளினால் வழங்கப்படுகின்ற சேவைகளை முன்னேற்றுவதற்கான குறுகிய கால மற்றும் நீண்ட கால இலக்குகளை அடையாளம் காணும் செயற்பாட்டு திட்டங்களை திட்டமிடுவதற்கு, சேவை வழங்குநர்கள் மற்றும் சேவை பெறுநர்களுக்கிடையில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. இச் செயற்பாட்டு திட்டங்கள் குறிப்பாக சேவை வழங்குநர்களின் முன்னேற்றத்தையும் பொறுப்புணர்வையும் கண்காணிக்கும் வகையில் CSO களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

முதலாவது eCRC ஆய்வின் போது, பிரதேச சபைகளின் சேவை வழங்கல் தொடர்பாக தரப்பட்ட மதிப்பீடுகளுக்கு எதிராக அதனை தொடர்ந்து, முன்னேற்றத்தினை ஆராய்வதற்கு இரண்டாவது eCRC ஆய்வானது 2018 செப்டம்பர்-ஒக்டோபர் மாதங்களில் மேற்கொள்ளப்பட்டது. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள நிறக்குறியீடானது, திருப்தி மட்டங்களை சுட்டிக்காட்டுவதற்கும், சேவை முன்னேற்றம் தேவைப்படும் பகுதிகளை சுட்டிக்காட்டுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. அடிப்படை ஆய்வு (முதலாவது ஆய்வு) மற்றும் அதன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் (இரண்டாவது ஆய்வு) போது, திருப்தி மட்டங்களுக்கிடையிலான ஒப்பீடொன்றினை விளக்கப்படம் 18 வழங்குகின்றது. நிறத்தில் ஏற்படுகின்ற எந்தவொரு மாற்றமும் திருப்தி மட்டங்களில் ஏற்படுகின்ற மாற்றத்தினை பிரதிபலிக்கின்றன, இதன்மூலம் கடந்த நான்கு மாதங்களில் ஏற்பட்ட முன்னேற்றம்/பின்னடைவின் அளவு சுட்டிக்காட்டப்படுகின்றது.

| நிறம் | உயர் திருப்தியுடைய பயனர்களின் % | தேவைப்படும் நடவடிக்கை |
|---|---|---|
| | 40% இற்கும் குறைவான திருப்தியுடைய பயனர்கள் | உடனடி கவனம் தேவை |
| | 40%-60% இற்கு இடைப்பட்ட திருப்பியுடைய பயனர்கள் | முன்னேற்றம் தேவை |
| | 60% இற்கும் அதிகமான திருப்தியுடைய பயனர்கள் | செயற்திறனைப் பராமரிக்க வேண்டும்அல்லது தொடர்ச்சியானமுன்னேற்றங்கள் தேவை |

*****_திருப்தியான பயனர்களுள் உயர்ந்த மற்றும் நடுத்தர திருப்தியடைந்த சேவை பயனர்கள் உள்ளடக்கப்படுகின்றனர்_

ஒரு நிறமாற்றம் தெளிவாக தெரியவில்லை என்றாலும்,திருப்தி வீதத்தில் ஏற்படுகின்ற ஒரு அதிகரிப்பானது சேவை வழங்கல் அடிப்படையில் ஏற்படுகின்ற ஒரு முன்னேற்றமாக கருதமுடியும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, முன்னேற்ற கண்காணிப்பு அட்டவணையான விளக்கப்படம் 18 பல நன்மைகளை வழங்குகின்றது. பொதுச்சேவைகள் மற்றும் சேவை வழங்குநர்களிடமிருந்து அதிகளவான பொறுப்புணர்வு/நடவடிக்கையினை வலியுறுத்துதல் தொடர்பாக சேவை பெறுநர்கள் தமது திருப்தி மட்டங்களை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பினை இது வழங்குகின்றது. பொதுமக்களுக்குரிய தேர்தல் தொகுதியில் முதலாம் கட்ட ஆய்விலிருந்து இரண்டாம் கட்ட ஆய்வு வரை எவ்வாறான சேவை முன்னேற்றங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பதை அவர்களுக்கு விளக்குவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதகளுக்கான ஒரு பயன்மிக்க கருவியாகவும் காணப்படுகின்றது.

சேவை வழங்கலோடு தொடர்புடைய மிகவும் சிக்கலான விடயங்களை சுட்டிக்காட்டுகின்ற சமூக கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட சமிக்ஞைகளாக காணப்படுகின்ற eCRC கண்டறிவுகளை நினைவில் கொண்டு,உடனடி கவனம் செலுத்த வேண்டிய பகுதிகளில் மேலதிக செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக இந்த eCRC ஆல் வழங்கப்பட்ட தகவல்களை பயன்படுத்த முடியும். இந்த சிக்கல்களோடு இணைந்துள்ள காரணங்களை புரிந்துகொள்வதற்கு ஆழமான ஆய்வுகள் தேவைப்படலாம்.

இலக்கிடப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பின்வருவன பரிந்துரைக்கப்படுகின்றன:

- இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு, குறிப்பாக சேவை வழங்கல் செயற்பாடுகள் பலவீனமாககாணப்படுகின்ற பிரதேசங்களை அடையாளம் காணுதல்,
- சேவைகளை முன்னேற்ற பூர்த்திசெய்யப்படவேண்டிய இடைவெளிகளை கண்டறிந்து திறமையான சேவை வழங்கலினை தடுக்கின்ற காரணங்கள் மற்றும் காரணிகள்தொடர்பாக விசாரணை செய்தல்,
- சேவை வழங்கலின் இடைவெளியினை குறைப்பதற்கு தலையீடுகளின் சேர்க்கையானது அடையாளம் காணப்பட வேண்டும்.

- சேவை வழங்கல் இடைவெளிகள் அடையாளம் காணப்பட்டவுடன், தரநிலை மதிப்பீட்டு மட்டங்களில் இருந்து சேவை வழங்கல் செயற்பாடுகள் மேம்பட்டுள்ளதா என்பதை தீர்மானிப்பதற்குத் தேவைப்படும் சேவை பயனர்களின் திருப்தி மட்டங்களை தொடர்ந்து பின்பற்றவேண்டும்.

# இணைப்பு 1: செயற்பாட்டுத்திட்டங்கள்

**இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை கண்டறிவுகளை அடிப்படையாகக் கொண்டு பிரதேச சபைகளின் சேவை வழங்கல் குறித்த திருப்தியினை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டுத்திட்டம் - ஏறாவூர் பற்று பிரதேச சபை**

| தொ.இல | முன்னுரிமைப்படுத்தப் பட்ட சேவைகள் (எச்சேவைகள்) | குறுங்காலம அல்லது நீண்டகாலம் | சேவைகளை வழங்குவதற்கு யார் பொறுப்பு | ஏனைய பங்குதாரர்கள்/தேவைப்படும் வளங்கள் | ஆரம்பித்த திகதி | முடிவடையு ம் திகதி | செயற்பாட்டினை யார் கண்காணிப்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வடிகாலமைப்பு | குறுங்காலம் | பிரதேச சபை - PS | கிராமிய அபிவிருத்தி சங்கம் /ME | மே 2018 | ஜுன் 2018 | கிராமிய அபிவிருத்தி சங்கம் / பிரதேச சபை |
| 2 | நூலகம் | குறுங்காலம் | பிரதேச சபை - PS | கிராமிய அபிவிருத்தி சங்கம் /ME | ஜுன் 2018 | | கிராமிய அபிவிருத்தி சங்கம்/ பிரதேச சபை |
| 3 | வீதி விளக்குகள் | குறுங்காலம் | பிரதேச சபை - PS | கிராமிய அபிவிருத்தி சங்கம் /ME | 2018.05.31 | | கிராமிய அபிவிருத்தி சங்கம் / பிரதேச சபை |
| 4 | விளையாட்டு மைதானம் | குறுங்காலம் | பிரதேச சபை - PS | கிராமிய அபிவிருத்தி சங்கம் /ME | 2018.05.25 | | கிராமிய அபிவிருத்தி சங்கம்/ பிரதேச சபை |

**இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை கண்டறிவுகளை அடிப்படையாகக் கொண்டு பிரதேச சபைகளின் சேவை வழங்கல் குறித்த திருப்தியினை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டுத்திட்டம் - ஓட்டமாவடி பிரதேச சபை**

| தொ.இல | முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகள் (எச்சேவைகள்) | குறுங்காலம அல்லது நீண்டகாலம் | சேவைகளை வழங்குவதற்கு யார் பொறுப்பு | ஏனைய பங்குதாரர்கள்/தேவைப்படும் வளங்கள் | ஆரம்பித்த திகதி | முடிவடையும் திகதி | செயற்பாட்டினை யார் கண்காணிப்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வீதி விளக்குகள் | குறுங்காலம் | பிரதேச சபை - PS | Public<br>CC/ கிராமிய அபிவிருத்தி சங்கம் | மே 2018 | ஜுன் 2018 | CC/ கிராமிய அபிவிருத்தி சங்கம், பிரதேச சபை - PS |
| 2 | குடிநீர் (நீர்த்தாங்கியைப் பொருத்துதல் ) | குறுங்காலம் | பிரதேச சபை - PS | Public<br>CC/ கிராமிய அபிவிருத்தி சங்கம | ஜுன் 2018 | ஒக்டோபர் 2018 | CC/ கிராமிய அபிவிருத்தி சங்கம், பிரதேச சபை - PS |
| 3 | வீதிகள் மற்றும் ஒழுங்கைகள் | நீண்டகாலம் | பிரதேச சபை - PS | Public<br>CC/ கிராமிய அபிவிருத்தி சங்கம் | ஜுலை 2018 | நவம்பர் 2018 | CC/ கிராமிய அபிவிருத்தி சங்கம், பிரதேச சபை - PS |
| 4 | நூலகம்/வாசிப்பறை | நீண்டகாலம் | பிரதேச சபை - PS | Public<br>CC/ கிராமிய அபிவிருத்தி சங்கம் | மே 2018 | டிசம்பர 2018 | CC/ கிராமிய அபிவிருத்தி சங்கம், பிரதேச சபை - PS |
| 5 | வடிகாலமைப்பு | நீண்டகாலம் | பிரதேச சபை - PS | Public<br>CC/ கிராமிய அபிவிருத்தி சங்கம் | நவம்பர் 2018 | டிசம்பர் 2018 | CC/ கிராமிய அபிவிருத்தி சங்கம், பிரதேச சபை - PS |
| 6 | விளையாட்டு மைதானம் | நீண்டகாலம் | பிரதேச சபை - PS | Public<br>CC/ கிராமிய அபிவிருத்தி சங்கம் | ஆகஸ்ட் 2018 | டிசம்பர் 2018 | CC/ கிராமிய அபிவிருத்தி சங்கம், பிரதேச சபை - PS |
| 7 | கழிவகற்றுதல் | நீண்டகாலம் | பிரதேச சபை - PS | Public<br>CC/ கிராமிய அபிவிருத்தி சங்கம் | ஜனவரி 2019 | | CC/ கிராமிய அபிவிருத்தி சங்கம், பிரதேச சபை - PS |

**இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை கண்டறிவுகளை அடிப்படையாகக் கொண்டு பிரதேச சபைகளின் சேவை வழங்கல் குறித்த திருப்தியினை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டுத்திட்டம் - கோரலைப்பற்று தெற்கு பிரதேச சபை**

| தொ.இல | முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகள் (எச்சேவைகள்) | குறுங்காலம அல்லது நீண்டகாலம் | சேவைகளை வழங்குவதற்கு யார் பொறுப்பு | ஏனைய பங்குதாரர்கள்/தேவைப்படும் வளங்கள் | ஆரம்பித்த திகதி | முடிவடையும் திகதி | செயற்பாட்டினை யார் கண்காணிப்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வீதி விளக்குகள் | குறுங்காலம் | தலைவர் மற்றும் செயலாளர் | CBOs மற்றும் பொதுமக்கள் | ஜூன 2018 | செப்டம்பர் 2018 | பிரதேச சபை மற்றும் பொதுமக்கள் |
| 2 | குடிநீர் | நீண்டகாலம் | தலைவர் மற்றும் செயலாளர் | CBOs மற்றும் பொதுமக்கள் | ஜூலை 2018 | டிசம்பர் 2018 | பிரதேச சபை மற்றும் பொதுமக்கள் |
| 3 | கழிவகற்றல் | நீண்டகாலம் | தலைவர் மற்றும் செயலாளர் | CBOs மற்றும் பொதுமக்கள் | ஆகஸ்ட் 2018 | டிசம்பர் 2018 | பிரதேச சபை மற்றும் பொதுமக்கள் |
| 4 | நூலகம் | குறுங்காலம் | தலைவர் மற்றும் செயலாளர் | CBOs மற்றும் பொதுமக்கள் | செப்டம்பர் 2018 | செப்டம்பர 2018 | பிரதேச சபை மற்றும் பொதுமக்கள் |
| 5 | வடிகாலமைப்பு | நீண்டகாலம் | தலைவர் மற்றும் செயலாளர் | CBOs மற்றும் பொதுமக்கள் | ஒக்டோபர் 2018 | டிசம்பர் 2018 | பிரதேச சபை மற்றும் பொதுமக்கள் |
| 6 | வீதிகள் மற்றும் ஒழுங்கைகள் | நீண்டகாலம் | தலைவர் மற்றும் செயலாளர் | CBOs மற்றும் பொதுமக்கள் | நவம்பர் 2018 | டிசம்பர் 2018 | பிரதேச சபை மற்றும் பொதுமக்கள் |

**இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை கண்டறிவுகளை அடிப்படையாகக் கொண்டு பிரதேச சபைகளின் சேவை வழங்கல் குறித்த திருப்தியினை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டுத்திட்டம் - போரத்தீவுப்பற்று பிரதேச சபை**

| தொ. இல | முன்னுரிமைப்படுத்தப் பட்ட சேவைகள் (எச்சேவைகள்) | குறுங்காலம அல்லது நீண்டகாலம் | சேவைகளை வழங்குவதற்கு யார் பொறுப்பு | ஏனைய பங்குதாரர்கள்/ தேவைப்படும் வளங்கள் | ஆரம்பித்த திகதி | முடிவடையும் திகதி | செயற்பாட்டினை யார் கண்காணிப்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | குடிநீர் | குறுங்காலம் | தலைவர் மற்றும் செயலாளர் | பொதுமக்கள் | 2018.04.15 | 2018.10.15 | பிரதேச சபை |
| | | | | | | | |
| | | | | | | | |
| 2 | வீதி விளக்குகள் | குறுங்காலம் | தலைவர் மற்றும் செயலாளர் | பொதுமக்கள் | 2018.05.15 | தொடர்கின்றது | பிரதேச சபை |
| 3 | கல்லறைகள் | குறுங்காலம் | தலைவர் மற்றும் செயலாளர் | பொதுமக்கள் | 2018.05.05 | 2018.06.10 | பிரதேச சபை |
| 4 | கழிவகற்றல் மற்றும் (விழிப்பணர்வு ) | குறுங்காலம் | தலைவர் மற்றும் செயலாளர் | பொதுமக்கள் | 2018.05.15 | தொடர்கின்றது | பிரதேச சபை |
| 5 | விளையாட்டு மைதானம் | நீண்டகாலம் | தலைவர் மற்றும் செயலாளர் | பொதுமக்கள் | | | |
| 6 | வீதிகள் | நீண்டகாலம் | தலைவர் மற்றும் செயலாளர் | பொதுமக்கள் | | | |
| 7 | வடிகாலமைப்பு | நீண்டகாலம் | தலைவர் மற்றும் செயலாளர் | பொதுமக்கள் | | | |
| 8 | நூலகம் | குறுங்காலம் | வாசிப்பவர்களிடமிருந்து கோரப்படுகின்ற தேவையான புத்தகங்கள் | பொதுமக்கள் | ஒரு மாதத்துக்குள் | | |
| 9 | ஒழுங்கைகளை பராமரித்தல் மற்றும் சீரமைத்தல் | குறுங்காலம் | துலைவர் மற்றும் செயலாளர் | பொதுமக்கள் | 2018.05.05 | 2018.08.31 | |

**இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை கண்டறிவுகளை அடிப்படையாகக் கொண்டு பிரதேச சபைகளின் சேவை வழங்கல் குறித்த திருப்தியினை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டுத்திட்டம் - மண்முனை தென்மேற்கு பிரதேச சபை**

| தொ. இல | முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகள் (எச்சேவைகள்) | குறுங்காலம அல்லது நீண்டகாலம் | சேவைகளை வழங்குவதற்கு யார் பொறுப்பு | ஏனைய பங்குதாரர்கள்/ தேவைப்படும் வளங்கள் | ஆரம்பித்த திகதி | முடிவடையும் திகதி | செயற்பாட்டினை யார் கண்காணிப்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கழிவகற்றல் | 1 மாதம் குறுங்காலம் | பிரதேச சபை | CBOs | 2018.05.10 | 2018.06.10 | பிரதேச சபை தலைவர் மற்றும் செயலாளர், CBOs தலைவர் மற்றும் செயலாளர் |
| 2 | வீதி விளக்குகள் | குறுங்காலம் | பிரதேச சபை | பொதுமக்கள் மற்றும் CBOs | 2018.06.01 | 2018.08.30 | பிரதேச சபை தலைவர் மற்றும் செயலாளர், CBOs தலைவர்,செயலாளர், மற்றும் பொதுமக்கள் |
| 3 | நூலகம் ( பாடத்திட்ட புத்தகங்கள்/ பாடப்புத்தகங்கள்) | நீண்டகாலம் | பிரதேச சபை | பொதுமக்கள் / வாசகர்கள் | 2018.05.01 | 2018.11.01 | பிரதேச சபை தலைவர் மற்றும் செயலாளர், சனசமூக நிலையம் |
| 4 | குடிநீர் ( வரட்சிக் காலங்களில் ) | நீண்டகாலம் | பிரதேச சபை | பொதுமக்கள் | 2018.07.15 | நவம்பர் 2018 | பிரதேச சபை தலைவர், செயலாளர், மற்றும் பொதுமக்கள |
| 5 | வீதிகள் / ஒழுங்கைகள் | நீண்டகாலம் | பிரதேச சபை | பொதுமக்கள் | | | |
| 6 | விளையாட்டு மைதானப் பாராமரிப்பு | நீண்டகாலம் | பிரதேச சபை | பொதுமக்கள் | | | |
| 7 | வடிகாலமைப்பு | நீண்டகாலம் | பிரதேச சபை | | | | |

“சமூக அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி இணை உருவாக்கம்: சிறந்த சமூக அபிவிருத்தியை எட்டும் பொருட்டு பொதுமக்கள் சார் சமூக அமைப்புக்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்குமிடையேயுள்ள ஒருங்கிணைப்பின் வளர்ச்சிக்கு துணைசெய்தல்” எனும் ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவி திட்டத்தின் கீழ் வறுமை ஆராய்ச்சி நிலையமானது மட்டகளப்பு, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வகளை (eCRC) மேற்கொண்டது. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வகளானது (eCRC), தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுப்பகுதியில் காணப்படுகின்ற

(i) பிரதேச சபையின் சேவைகள் வழங்கல்
(ii) இரண்டாம் நிலை கல்விச்சேவை வழங்கல்

ஆகிய இரண்டு துறைகளின் சேவைத்தரம், சேவை வழங்குனர்களின் பொறுப்பு மற்றும் சேவை முன்னேற்றங்களை வேண்டி நிற்கினற பகுதிகள் போன்றவற்றினை தீர்மானிப்பதை இலக்காக கொண்டிருந்தது. தற்போது பொதுசேவைகளைப் பெற்றுக்கொள்பவர்களின் அணுகல், தரம் மற்றும் திருப்தி போன்றவற்றினை மதிப்பிடுவதற்கான கருவியாக அதேபோல சமூகப் பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான கருவியாகவும் இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையினை (eCRC) பயன்படுத்த முயற்சிக்கும் நோக்குடன் முதலாவது இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் (eCRC) கண்டறிவுகளை இநந்த அறிக்கையானது வழங்குகின்றது. மூன்று மாவட்டங்களில் இருந்து பதிலளித்தவர்களால் அடையாளப்படுத்தப்பட்ட சேவை வழங்கலில் உடனடி கவனம் மற்றும் முன்னேற்றத்தினை வேண்டி நிற்கின்ற பல பகுதிகளை இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் (eCRC) முடிவுகளானது வெளிக்காட்டி நிற்கின்றன. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் (eCRC) ஆரம்ப முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு, செயற்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டதோடு சேவை வழங்குனர்கள் மற்றும் சேவை பெறுபவர்களுக்கிடையிலான கலந்துரையாடல்கள் ஒழுங்குசெய்யப்பட்டன. இந்த ஆய்வின் கண்டறிவுகளை பரவலாக்கவதற்கும், செயற்பாட்டுக் கொள்கை மற்றும் நடைமுறைச் சீர்த்திருத்தங்கள் தொடர்பாக ஆலோசிப்பதற்கு இத்தகவல்களை பயன்படுத்துவதற்கும் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.



29 ஆர்.ஜி சேனநாயக்க மாவத்தை,
கொழும்பு 07, இலங்கை.
தொலைபேசி: +94(011) 2676 955, 4690200
தொலைநகல்: +94(011) 2676 959
மின்னஞ்சல்: info@cepa.lk
www.cepa.lk

centre for poverty analysis

European Union

ACTED

ISBN: 978-955-3628-46-6